ஸ்ரீ அன்னபூர்ணா
ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்ரிங்


# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 37 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, டிச 10 - 16, 2023, 8 + 4 பக்கங்கள், ₹ 5/- ஆண்டு சந்தா - ₹ 260/-


SREE Annapoorna
SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

# நல்லுள்ளங்களின் ஆதரவில்
# 11-ம் ஆண்டு வெற்றிப்பயணம்!

கையடக்க செல்போனில் உலகமே தெரிகின்ற இந்த அறிவியல் யுகத்தில், அதிலும் வாசிக்கின்ற பழக்கம் குறைந்து வருகின்ற காலத்தில் ஒரு பத்திரிகையை வெற்றிகரமாக நடத்துவது என்பது சாதாரண செயல் அல்ல.

அந்த வகையில் உங்கள் அபிமானத்தைப் பெற்ற எங்கள் ‘தி கோவை மெயில்’ பத்திரிகை தனது 10 ஆண்டுகளை 12.12.2023 அன்று நிறைவு செய்து, தற்போது பதினோராம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது என்பதை இந்த நேரத்தில் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம். பெரிய திரை, சின்னத்திரை, செல்போன் திரை, இன்னும் பல சமூக வலைத்தள ஊடகங்களை எல்லாம் தாண்டி மக்களிடம் வாசிப்பு பழக்கத்தையும், செய்திகளையும் கொண்டு சேர்ப்பது என்பது கடினமான காரியமே. இருப்பினும், உங்கள் ‘தி கோவை மெயில்’ பத்திரிகையானது அனைத்து மக்களையும் சென்றடையும் வகையில் ஃபேஸ்புக், யூடியூப், வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் என்று பல பரிமாணங்களில் செய்திகளை உடனுக்குடன் கொடுத்து, மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றிப்பயணத்திற்கு அடித்தளமாக இருந்து ஆதரவு அளித்து வழி நடத்துகின்ற வாசகர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள், அரசு அதிகாரிகள், சக பத்திரிகையாளர்கள், அலுவலக நண்பர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வது எங்களது தார்மிகக் கடமை ஆகும்.

‘தி கோவை மெயில்’ கடந்து வந்த பத்தாண்டு காலம் என்பது ஒரு நல்ல முயற்சிக்கு எந்த அளவுக்கு மக்கள் ஆதரவு தருவார்கள் என்பதற்கு ஒரு நடைமுறை எடுத்துக்காட்டு ஆகும். அதிலும் குறிப்பாக நமது ‘தி கோவை மெயிலுக்கு’ அமைந்த வாசகர்களையும், விளம்பரதாரர்களையும் இந்த நேரத்தில் இருகரம் கூப்பி வணங்குகின்றோம். ஒவ்வொரு வாரமும் எங்கள் இடைவிடாத தொடர் முயற்சிக்கும், கடின உழைப்பிற்கும் தொடர்ந்து ஆதரவும் விளம்பரமும் வழங்கிவரும் வெகுசிலரைக் குறித்து இங்கு குறிப்பிட வேண்டியது மிகவும் அவசியம்.

முதன்முதலாக ‘தி கோவை மெயில்’ பத்திரிகையைத் தொடங்கும்போது, வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக வந்து சிறப்பித்த டாக்டர் ஏ.வி.வரதராஜன் அவர்களையும், அன்றைய தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிலைய இயக்குநர் ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்களையும் இந்த நேரத்தில் அன்புடன் நினைவு கூறுகின்றோம். இந்த சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள், பெரிய தொழிலதிபர்கள், பெரும் பொறுப்புகளில் இருப்பவர்கள் என்றாலும் நமது சிக்கல்களை உணர்ந்து தொடர்ந்து அப்போதும் இப்போதும் எப்போதும் ஆதரவு தருபவர்கள்.

அந்த வகையில், கே.எம்.சி.ஹெச். மருத்துவ மற்றும் கல்வி சேவை நிறுவனங்களின் நிறுவனரான டாக்டர் நல்ல ஜி. பழனிசாமி அவர்கள், நமது ‘தி கோவை மெயில்’ மீது மிகுந்த அன்பு கொண்டவர். அத்துடன், நமது பத்திரிகை தொடர்ந்து வெளிவர வேண்டும் என்று விரும்புபவர். பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தால் அதன்மூலம் நாம் எவ்வளவு திரும்பப் பெற முடியும் என்று நினைக்கும் காலகட்டத்தில், இப்பத்திரிகை நல்ல முறையில் வளர வேண்டும் என்று நினைப்பவர். பெரும் பணிகளுக்கிடையில், தனது அலுவலர்களிடம் ‘கோவை மெயிலுக்கு விளம்பரம் கொடுத்தீர்களா..? பணம் சரியாகத் தருகிறீர்களா..?’ என்று நம் பத்திரிகையின் மீது அன்புகொண்டு தனி கவனத்துடன் விசாரிக்கும் நல்லுள்ளம் கொண்டவர் நல்ல ஜி பழனிசாமி அவர்கள். அவருக்கு எமது நன்றிகளை இந்தத் தருணத்தில் மனமாரத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழகத்தின் தனிப்பெரும் கல்வி நிறுவனமாக வளர்ந்தோங்கி செயல்பட்டுவரும் பி.எஸ்.ஜி. நிறுவனம், நமது ‘தி கோவை மெயில்’ மீது காட்டிவரும் அன்பும் தனித்தன்மை வாய்ந்தது. அந்நிறுவனத்தின் அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன் அவர்கள், எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் அங்கே நமது ‘தி கோவை மெயில்’ பத்திரிகையாளர்கள் வந்திருக்கிறார்களா..?! என்று கேட்பது மட்டுமின்றி, எப்போதும் எந்த உதவி கேட்டாலும் உடனடியாக உதவும் நல்லுள்ளங்களில் ஒருவர்.

அதேபோல், கோவையின் முதல் தனியார் மருத்துவமனையாகத் தொடங்கப்பட்டு தற்போது கோவைக்கு பெருமை சேர்த்து வரும் ஜி.கே.என்.எம். மருத்துவமனை நிர்வாகத்திற்கும், அதன் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுசாமி அவர்களுக்கும்,டெக்ஸ்டைல் துறையில் தனியிடம் பிடித்திருக்கும் கே.பி.ஆர். குழுமத்தின் தலைவர் கே.பி. ராமசாமி அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், கோவையின் இன்னொரு முக்கிய மருத்துவ முகமான டாக்டர் கே.ஜி. பக்தவத்சலம் அவர்களின் இதயப்பூர்வமான ஆதரவுக்கும் எங்களுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதைப்போலவே, இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், எஸ்.என்.ஆர். கல்வி நிறுவனங்களின் அறங்காவலர் லக்ஷ்மி நாராயணசுவாமி, கொங்குநாடு கல்லூரி செயலாளர் வாசுகி, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் மலர்விழி, நொய்யல் என்றாலே கோவை மக்களின் நினைவுக்கு வரும் சுற்றுச்சூழல் இயக்கத் தலைவர் தொழிலதிபர் வனிதா மோகன், முன்னாள் இந்தியத் தொழில் வர்த்தக சபைத் தலைவர் டி.நந்தகுமார் போன்றவர்களுக்கும் இந்த நேரத்தில் எங்களது நெஞ்சார்ந்த நன்றிகள்.

கோவையின் பெருமையாக இருந்து உணவுத் துறையில் பல சாதனைகளைப் படைத்துவரும் ஸ்ரீ அன்னபூர்ணா குழுமங்களின் தலைவர் சீனிவாசன், தொழில் துறையில் சாதனை படைப்பதோடு சமூக, கலாச்சாரப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டுவரும் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனர் கிருஷ்ணன் அவர்களுக்கும், பால் வளத்துறையில் சாதனைப் படைக்கும் அரோமா நிறுவனத்தின் தலைவர் பொன்னுசாமி அவர்களுக்கும் எங்களது கனிவான நன்றிகள்!

இவர்கள் மட்டுமல்லாது கோவையைச் சேர்ந்த பல்வேறு துறைகளைச் சார்ந்த தனிப்பெரும் ஆளுமைகளின் அன்பும் ஆதரவும் எங்களுக்கு என்றும் வழிகாட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்கிறது என்பதில் எங்களுக்கு பெருமை. பெயர் குறிப்பிட மறந்தாலும் அவர்கள் எல்லோரையும் நினைவுகூர்வதும் நன்றி செலுத்துவதும் எங்களுடைய கடமை ஆகிறது.

இவர்களைத் தாண்டி, சேகரிக்கும் செய்திகளையும் தகவல்களையும் அச்சிலும், காட்சியிலும் கொண்டு வருவதற்குத் தொடர்ந்து தங்களது உழைப்பை வழங்கிவரும் நமது ‘தி கோவை மெயில்’ செய்தியாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், அச்சகப் பணியாளர்கள், ஆசிரியர் குழுவினர் உள்ளிட்டோருக்கும்; விளம்பர மற்றும் செய்தி முகவர்களுக்கும், பல்வேறு உழைப்பாளர்கள் அனைவருக்கும் எங்களது கைநிறைந்த நன்றிகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒரு சமூகத்தில் நல்லிணக்கம் நிலவுவதற்கும், அறிவார்ந்த கருத்துகள் உருவாகி பரவுவதற்கும், எதிர்பாராது ஏற்படும் சமூக இடர்களை எதிர்கொள்வதற்கும் பத்திரிகையின் பணி அவசியம். அதேநேரம், அந்த பத்திரிகைகளின் நோக்கம் நிறைவேறுவதற்கும், தொடர்ந்து வெளி வருவதற்கும் அடித்தளமாக இருக்கும் வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்களின் ஆதரவும் மிகவும் முக்கியம்.

அந்த வகையில், கடந்த 10 ஆண்டுகளாக பல தடைகளைத் தாண்டி நல்ல உள்ளங்கள் பலரின் அன்பும் ஆதரவும் பெற்று, வெற்றியுடன் 11 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்து மேலும் பல சாதனைகளை நோக்கிப் பயணிக்கும் எங்களுக்கு எப்போதும்போல் உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும் ஊக்கமும் வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

## உயரங்களை அடைய வேண்டும்



**- கிராந்தி குமார்,**
ஆட்சியர், கோவை மாவட்டம்

கோயம்புத்தூர் மாவட்ட செய்திகள், கல்வி, மருத்துவம், தொழில் உள்ளிட்ட பல செய்திகளை உள்ளடக்கி வாரம் ஒரு முறை வெளிவரும் ‘தி கோவை மெயில் பத்திரிக்கை பத்தாம் ஆண்டு நிறைவு செய்து 11 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பது மிகவும் மகிழ்ச்சி. தமிழ்நாடு அரசின் மக்கள் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதில் பத்திரிக்கை துறையின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். இப்பணியை செவ்வனே செயல்படுத்தி வரும் தி கோவை மெயில் வாரஇதழ் மென்மேலும் பல உயரங்களை அடைய வாழ்த்துகள்.

## வாரம்தோறும் எதிர்பார்க்கும் பத்திரிகை



**- டாக்டர் நல்ல.ஜி.பழனிசாமி,**
தலைவர் கே.எம்.சி.ஹச்

கோயம்புத்தூருக்கு மிகப் பெரிய வரப்பிரசாதம். கோவையில் உள்ள அனைவரையும் இணைக்கும் பத்திரிக்கை ஒன்று இருக்கும் என்றால் அது தி கோவை மெயில் தான். வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமையில் நான் எதிர்பார்க்கும் பத்திரிக்கை. கோவையில் உள்ள முக்கிய நிறுவனங்கள், முக்கிய பிரமுகர்கள் பற்றி தெரிவிப்பது தி கோவை மெயில் தான். இத்தகைய சிறப்பு மிக்க தி கோவை மெயில் பத்தாவது ஆண்டு நிறைவு செய்து 11ம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.


## மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும்



**- ஏ.வி.வரதராஜன்,**
தலைவர், ஏவிவி குழுமம்

தி கோவை மெயில் தொடங்கி பத்து ஆண்டுகளாக கோவையில் நிகழும் முக்கிய தகவல்களையும், சமுதாயத்திற்கு பயனுள்ள செய்திகளையும் பதிவு செய்து மக்களின் பேராதரவுடன் வளர்ச்சி பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இன்னும் வருங்காலத்தில் கொங்கு மண்டல செய்திகளை அதிக அளவில் உள்ளடக்கி மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் பெரும் வளர்ச்சி அடைய வாழ்த்துகிறேன். மேலும் தி கோவை மெயில் ஆசிரியர்களுக்கும், பணியாளர்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகள்.

## அற்புதமான புகைப்படங்களோடு வெளிவரும் பத்திரிகை



**- கிருஷ்ணராஜ் வாணவராயர்,**
தலைவர், பாரதிய வித்யா பவன்

தி கோவை மெயில் கடந்த பத்து ஆண்டுகளாக மிகச் சிறப்பாக செயல்பட்டு வருவதை நாம் அறிவோம். வாரம் ஒரு முறை, ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் பத்திரிக்கையில், கோவையையும், அதை ஒட்டிய பகுதிகளில் நடக்கின்ற சம்பவங்களை மிக அழகாக, அற்புதமான புகைப்படங்களோடு வெளிக்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக, கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளில் நடக்கும் நிகழ்வு செய்திகளுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள். தி கோவை மெயில் மென்மேலும் வளர வேண்டும்.

## மைல்கல்லை எட்டியதற்கு வாழ்த்துகள்



**- எல்.கோபாலகிருஷ்ணன்,**
நிர்வாக அறங்காவலர்,
பி.எஸ்.ஜி & சன்ஸ் அறக்கட்டளை

தி கோவை மெயில் வாரப் பத்திரிக்கை 10 வது ஆண்டு மைல்கல்லை எட்டியதற்கு வாழ்த்துகள்! நுண்ணறிவு மிக்க செய்திகளை வழங்குவதற்கும் சமூக ஈடுபாட்டை வளர்ப்பதற்கும் தி கோவை மெயிலின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது. இன்னும் பல வருடங்கள் வாசகர்களுடன் பத்திரிக்கை வாயிலாகவும், சமூக ஊடகத்தின் வழியாகவும் இணைந்திருக்க வேண்டும். கோவையின் வார இதழான தி கோவை மெயிலின் வெற்றிகள் மென் மேலும் தொடர வாழ்த்துகள்.

## ஆரோக்கியம் சார்ந்த சிறப்பு செய்திகள்



**- டாக்டர் ஜி.பக்தவத்சலம்,**
தலைவர், கே.ஜி மருத்துவமனை

தி கோவை மெயில் நூறு ஆண்டு பிறந்தநாள் காண வேண்டும் என்று வாழ்த்துகிறேன். எல்லோரும் வாழ வேண்டும் என்றால் அதற்கு நல்ல ஆசிரியர்கள் தேவை. நல்ல செய்திகள், ஆரோக்கியம் சார்ந்த மருத்துவ செய்திகள் வழங்கி கோவை மக்களுக்கு தொண்டாற்றி வருகிறது. இந்த தருணத்தில் தி கோவை மெயில் நிறுவனத்தில் பணியாற்றி வரும் அனைவருக்கும் முக்கியமாக சீனிவாசன் அவர்களுக்கும் எனது மகத்தான வாழ்துக்கள்.

## மிக அருமையான பத்திரிக்கை

**- கே.பி.ராமசாமி,**
தலைவர், கே.பி.ஆர். குழுமம்



தி கோவை மெயில் மிக அருமையான பத்திரிக்கை. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை செய்திகள் படித்த பிறகே நான் வெளியில் செல்வேன். அதுமட்டுமின்றி, கோவையில் நிகழும் நிகழ்ச்சிகள், தொழிலதிபர்களின் சந்திப்புகள் மற்றும் சாதனையாளர்கள் பட்டியல் வெளியிடுவதில் மிகுந்த ஆர்வத்துடன் செயலாற்றி வருகின்றனர். சீனிவாசன் எனக்கு மிக நெருங்கிய நண்பர். அந்த வகையில், இதன் 10 ஆண்டு நிறைவு பயணத்தில் நானும் ஒன்றாகக் கலந்துள்ளேன். தி கோவை மெயில் பத்திரிக்கை மென்மேலும் வளர என் வாழ்த்துகள்.

## வியப்பில் ஆழ்த்தும் தி கோவை மெயில்

**- ரவிசாம்,** நிர்வாக இயக்குனர்,
அத்வைத் லட்சுமி இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்



தி கோவை மெயில் பத்திரிக்கை நீண்ட காலம் உயர என் வாழ்த்துக்கள். கோவையின் வளர்ந்து வரும் பத்திரிக்கையான தி கோவை மெயில் 10 ஆண்டுகள் நிறைவுசெய்துள்ளது என்பது என்னை வியப்பில் ஆழ்த்துகிறது. கோவையின் அன்றாட செய்திகளை மக்களுக்கு வழங்கி, தொழிலதிபர்களுக்கு முக்கிய அங்கீகாரத்தை வழங்கி வருகிறது. அச்சு ஊடகத்தில் மட்டுமில்லாமல் இணையதளங்களிலும் சிறந்து விளங்குகிறது. அதன் வகையில், தி கோவை மெயில் பத்திரிக்கை மென்மேலும் உயர்ந்து, கோவை மக்களின் தேவைகளை பூர்த்திசெய்ய எனது வாழ்த்துக்கள்.

## 100 ஆண்டுகள் தொடர வேண்டும்

**- கோபிநாத்,**
துணைத் தலைவர், ஜி குப்புசாமி நாயுடு அறக்கட்டளை



தி கோவை மெயில் பத்திரிக்கை 10 ஆண்டுகள் நிறைவு செய்துள்ளது மிகவும் மகிழ்ச்சி. எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். தி கோவை மெயில் பத்திரிக்கை 100 ஆண்டுகள் பத்திரிக்கைத் துறையில் தனது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

## நிலையான முன்னேற்றத்தின் அர்ப்பணிப்பு



**- ரகுபதி வேலுசாமி,**
தலைமை நிர்வாக அதிகாரி,
ஜி.கே.என்.எம் மருத்துவமனை

பத்து ஆண்டுகளை நிறைவு செய்த தி கோவை மெயில் குழுவிற்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள். கடந்த 10 ஆண்டுகளாக கோவை மக்களுக்கு செய்திகள் வழங்குவதோடு, சிறந்த பத்திரிக்கையாக தனித்து நிற்கிறது. இதன் பயணம் ஒரு நிலையான முன்னேற்றத்தின் மைல்கல். கோவையின் நடப்புகளை தெரிந்து கொள்வதற்கு தி கோவை மெயில் பத்திரிக்கை மிகவும் உதவியளிக்கிறது. உறுதியான செய்திகளை வழங்கும் தி கோவை மெயிலின் அர்ப்பணிப்பு, கோவை மக்களிடம் மிகுந்த நம்பிக்கையை பெற்றுள்ளது. இது மென்மேலும் உயர்ந்து, தனது சேவையை தொடர எனது வாழ்த்துகள்.

## தனி இடம் எப்பொழுதும் உண்டு



**- மிருதுபாஷினி கோவிந்தராஜன்,**
இயக்குநர், உமன்ஸ் சென்டர்

கோவையில் இருக்கக்கூடிய ஒரு தனித்துவமான பதிப்பு. கோவையில் அச்சு ஊடகங்கள், இணையதளம்,சமூக ஊடகங்கள் என எத்தனையோ ஊடகங்கள் இருக்கின்றன. இருந்தாலும், கோவை மெயிலுக்கு என்று ஒரு தனி இடம் உள்ளது. கோவையை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் தி கோவை மெயில் பத்திரிக்கையை பார்த்து தெரிந்து கொள்ளலாம். கூடிய விரைவில் தினசரி நாளிதழாக வெளிவர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.



## இன்று வரை சிறப்பாக செயல்படுகிறது

**- வானதி சீனிவாசன்,**
கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் &
பாஜக தேசிய மகளிரணி தலைவர்

கோவை மக்களை செய்திகளோடு, நிகழ்வுகளோடு, பல்வேறு பயனுள்ள தகவல்களோடு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையில் தி கோவை மெயில் சந்தித்து கொண்டிருக்கிறது. இணையத்தின் வாயிலாக கடந்த 5 ஆண்டுகளாக மிகச் சிறப்பாக செயல்படுகிறது. தி கோவை மெயில் பத்திரிக்கையின் சேவை இன்னும் விரிவடைந்து அதிகமான மக்களை சென்றடைவதற்கு என் வாழ்த்துகள்.



## முன்னிலை பெறும் செய்தித்தாள்

**- நா.கார்த்திக்,** Ex.MLA.,
கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர்

தி கோவை மெயில் வார இதழ் மற்றும் யூடியூப் உள்ளிட்ட சமூக ஊடகங்களை சிறப்பாக நடத்தி வருகிறார்கள். அரசியல், சமூகம், பொருளாதாரம் உள்ளிட்ட துறை செய்திகளை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற தன்னார்வத்தோடு தி கோவை மெயில் மிகச் சிறந்த முறையில் இயங்கி வருகிறது. மருத்துவம், கல்வி செய்திகளை வெளியிடுவதில் தி கோவை மெயில் முன்னிலை பெறுகிறது. மிகச் சிறப்பாக செயல்படுகிறது. கோவை மாவட்ட திராவிட கழகத்தின் சார்பில் வாழ்த்துகள்.

## சிந்திக்கத் தூண்டும் செய்திகள்

- வனிதா மோகன்,
தலைவர், பிரிகால் லிமிடெட்,
நிர்வாக அறங்காவலர், சிறுதுளி.



10 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்த கோவை மெயிலுக்கு வாழ்த்து தெரிவிப்பதை பெருமையாகவும், பாக்கியமாகவும் கருதுகிறேன்.கோவை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடக்கும் நிகழ்வுகள் அது வணிகம், சுற்றுச்சூழல், சுகாதாரம், கல்வி போன்றவற்றின் பல்வேறு உள்ளடக்கம் தான் கோவை மெயிலைத் தனித்து நிற்கச் செய்கிறது. கட்டுரைகளின் தரம் மற்றும் தேர்வு ஆகியவை கவனிக்கத்தக்கவையாவும் சிந்திக்கத் தூண்டுவதாகவும் இருக்கிறது.

## கொங்கு மண்ணின் வரலாறு பேசும் வார விளக்கே வாழ்க...

- சரஸ்வதி கண்ணையன்,
நிர்வாக அறங்காவலர்,
இந்துஸ்தான் கல்வி நிறுவனங்கள்



வெள்ளைத்தாளில் விடியலைக் காட்டி விடியற்காலைக்கு வெளிச்சத்தைக் கூட்டி இல்லங்களிலும் உள்ளங்களிலும் இருக்கும் இருட்டை விலக்கி பத்தாண்டுகளாக பாதைகாட்டும் பத்திரிக்கைப் பூவே நீ வாழ்க! உன் பணி தொடர்க! கூவும் குயில் கேட்க கேட்க அழகு! தி கோவை மெயில் படிக்கப் படிக்க அழகு! கொங்கு மண்ணின் வரலாறு பேசும் வார விளக்கே வாழ்க நீ! உன் பத்தாண்டு பல்லாண்டாக உயர வாழ்த்துகள்.

## இன்னும் வளர வேண்டும்!

- நாகராஜ்,
தலைவர், ராம்ராஜ் காட்டன்

கடந்த 10 வருடங்களாக டிஜிட்டல் மற்றும் பிரிண்ட் துறையில் மிகவும் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள். ஒரு நிறுவனம் நிலையாக நிற்க வேண்டும் என்றால் குறைந்தது 5 அண்டுகளை கடக்க வேண்டும். அதைதான் நிலையான நிறுவனம் என்று சொல்வார்கள். அந்த வகையில், தி கோவை மெயில் ஆலமரமாக வளர்ந்து நிற்கிறது. இன்னும் பெரிய அளவில் வளர்ந்து சமூகத்திற்கு தனது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன். ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.



## ஏர்க்கக்கூடிய வளர்ச்சி

- V.கோபாலகிருஷ்ணன்,
முன்னாள் மேயர்

தி கோவை மெயில் பத்தி ரிக்கை தொடங்கிய நாள் முதல் எனக்கு நன்றாக பரீட்சயமான செய்தித்தாள். இப்பத்திரிக்கை வளர்ந்து வந்த விதத்தை பார்த்து நான் பூரிப்படைகிறேன். ஆகவே, தி கோவை மெயில் பத்திரிக்கை பல நூற்றாண்டுகள் வரை எனது வாழ்த்துக்கள்.



## மனதிற்கு இதமான செய்தித்தாள்


- எம்.கிருஷ்ணன், நிர்வாக இயக்குநர்,
ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்



அழகான, பசுமையான பிரம்மாண்டமான கோவையை படம்பிடித்துக் காட்டும் தி கோவை மெயில், மனதிற்கு இதமான செய்தித்தாள்.

## தனித்துவமான அடையாளம்


- C.A.வாசுகி,
செயலாளர், கொங்குநாடு கல்லூரி



ஞாயிற்றுக்கிழமை தோறும் வாசிக்கக்கூடிய தனித்துவமான அடையாளத்தை கோவை மக்களிடையே உருவாக்கியுள்ளது. தி கோவை மெயிலில் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் சமீபத்திய அரசியல் போன்ற முக்கிய துறைகளின் செய்திகள், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மிக அற்புதமாக வெளியாகின்றன. அந்த வகையில் 10 ஆண்டுகளை கடந்த தி கோவை மெயில், வார இதழில் இருந்து தினசரி நாளிதழாக உயர வேண்டும் என்பது எனது விருப்பம். அவ்வாறு உயர்வதற்கு எனது வாழ்த்துகள்.

## நம்பிக்கை தன்மை

- எ.பி.அப்புக்குட்டி,
தலைவர், தமிழ்நாடு நூற்பாலைகள் சங்கம்



தி கோவை மெயில் பத்திரிக்கை 10 ஆண்டு கடந்து இருப்பதை நினைத்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். செய்திகளை தரமாகவும், நம்பிக்கை தன்மை கொண்டதாகவும் வழங்குவதற்கு மிக்க நன்றி. இப்பத்திரிக்கை மேலும் மேலும் உயர எனது வாழ்த்துகள்.

## கோவையின் அங்கம்

- D.சீனிவாசன், நிர்வாக இயக்குநர்,
ஸ்ரீ அன்னபூர்ணா



முன்பெல்லாம், கோவை சாலைகளில் செல்லும் பொழுது சுவர்களில் சினிமா போஸ்டர்களை மட்டுமே பார்க்க முடியும். ஆனால், தற்பொழுது நம்மை அறியாமலும் சுவர்களில் தி கோவை மெயில் போஸ்டர்கள் உள்ளனவா..? அதில் என்ன செய்தி உள்ளது என்று பார்க்க தோன்றும் அளவில் கோவையின் ஒரு அங்கமாகவே தி கோவை மெயில் மாறிவிட்டது. கோவையிலிருந்து வெளிவரும் பத்திரிக்கையான தி கோவை மெயிலுக்கு எனது வாழ்த்துகள்.

## நேர்த்தியான செய்திகள்

- R.பொன்னுசாமி,
நிர்வாக இயக்குநர், அரோமா



உள்ளூர் செய்திகள், பிரபலங்கள் மற்றும் அரசியல், ஆன்மீகம், கல்வி, மருத்துவம் என எல்லா செய்திகளையும் ஒன்றிணைத்து நேர்த்தியாக வழங்கி வரும் தி கோவை மெயில் மென்மேலும் வளர வாழ்த்துக்கள்.

## சிறப்பான பங்களிப்பு

**- மோகன் சந்தர்,**
தலைவர், நேஷனல் மாடல் பள்ளி



கல்வி, மருத்துவம், விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களை மக்களிடம் எடுத்துச் செல்லும் பணியில் தி கோவை மெயிலின் பங்களிப்பு இன்றியமையாதது. செய்தித்துறையில், கோவை மாநகரில் மிகச் சிறந்த பத்திரிக்கையாக வளர்ந்து வரும் தி கோவை மெயில் நிறுவனத்திற்கு நேஷனல் மாடல் கல்விக் குழுமம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மென் மேலும் சிறந்து மிகப் பெரிய நிறுவனமாக வளர வேண்டும்.

## தினசரி நாளிதழாக வேண்டும்

**- நளின் விமல்குமார்,**
தொழில்நுட்ப இயக்குநர்,
எஸ்.என்.எஸ் கல்விக் குழுமம்



இந்த பத்து வருட உழைப்பு இன்றியமையாதது. இன்னும் பல ஆண்டுகள் செய்தித்துறையில் சிறப்பாக செயலாற்ற வேண்டும் என்பது எஸ்.என்.எஸ் குழுமத்தின் ஆசை. அதற்கான எங்கள் ஆதரவும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். வார பத்திரிக்கையாக வெளிவரும் தி கோவை மெயில் நாளிதழாக விரைவில் வெளிவர வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். போட்டிகள் நிறைந்த ஊடகத் துறையில் தனித்து நின்று வளர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

## மிகச் சிறப்பான பத்திரிகை

**- ராம்குமார் சிங்காரம்,**
தன்னம்பிக்கை பேச்சாளர்



எந்த தொழிலாக இருந்தாலும் அதனை சிறப்பாக வெளிக் கொண்டு வந்தால் அதில் நிச்சயம் வெற்றி காணலாம் என்பதற்கு எடுத்துக்காட்டு தி கோவை மெயில். அரசியல், திரை பிரபலங்களைத் தாண்டி, தொழில் நபர்களின் செய்திகளை வெளியிடுவதில் தி கோவை மெயில் மிகச் சிறப்பாக செயல்படுகிறது.

## மனமார்ந்த வாழ்த்துகள்

**- D.நந்தகுமார்,**
நிர்வாக இயக்குநர், செல்வம் ஏஜென்சிஸ்



பத்தாம் ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் தி கோவை மெயில் பத்திரிக்கைக்கு எனது வாழ்த்துகள். பல்வேறு சமுதாய அமைப்புகள் மற்றும் தொழில் அமைப்புகள் சார்ந்து இருக்கும் இந்த நகரத்திற்கு தேவையான செய்திகளை அச்சு மற்றும் இணையதளம் வாயிலாக வழங்கிவரும் தி கோவை மெயில் நிறுவனத்திற்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

## பொன்னான தருணம்

**- பாலசந்தர்,**
நிர்வாக இயக்குநர், ஹரிபவனம்



பத்தாவது ஆண்டு நிறைவு காணும் இந்த பொன்னான தருணத்தில் தி கோவை மெயில் பத்திரிக்கைக்கு எங்கள் நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சேவையை தொடர வேண்டும்

**- இயகாகோ சுப்ரமணியம்**



தி கோவை மெயில் பத்து ஆண்டுகள் நிறைவு செய்துள்ளது மிகவும் மகிழ்ச்சி. எந்த துறையில் என்ன நடக்கிறது என்பதை கொண்டு சேர்க்க வேண்டும். அந்த வகையில் உள்ளூர் அரசியல், கல்வி, மருத்துவம், இலக்கியம் என அனைத்தையும் எடுத்துச் சொல் இயங்கி வருகிறது தி கோவை மெயில். அவர்களுக்கு வாழ்த்துகள்.

## படிப்பதற்கு சுவாரஸ்யம்

**- உமா மகேஷ்வரி,**
இணை நிர்வாக இயக்குநர், அனன்யா குழுமம்



தி கோவை மெயில் தமிழ், ஆங்கிலம் என இரண்டு மொழிகளில் வெளிவருவதால் படிப்பதற்கு மேலும் சுவாரஸ்யமாக இருக்கிறது. கோவை நகரில் இருக்கக்கூடிய கல்வி, தொழில், மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் என்னென்ன முன்னேற்றங்கள் உள்ளதோ, அதனை மக்களிடம் நல்லபடியாக கொண்டு சேர்த்து வருகின்றனர். தி கோவை மெயில் மென்மேலும் வளர்ந்து, இன்னும் பல நகரங்களில் விற்பனையை தொடங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

## கோவையின் இதயத்துடிப்பு

**- கவிதாசன்,** கவிஞர்



தி கோவை மெயில், கோவை மக்களின் இதயத் துடிப்பாகத் திகழ்கிறது. சித்திரையின் சித்ரா பௌர்ணமியாக, வைகாசியின் விசாகமாக, ஆனியின் ஆனிப் பொன்னாக, ஆடியில் 18 ஆம் பெருக்காக, ஆவணியின் அவிட்டமாக, புரட்டாசியின் பொங்கு சனியாக, கார்த்திகையில் கனகமணி சரவிளக்காக, ஐப்பசியின் தீப ஒளித் திருநாளாக, மார்கழியின் வைகறை குயிலாக, தையின் தை பொங்கலாக, மாசியின் மகாமகமாக, பங்குனியின் சூரிய பிறபாகமாக தி கோவை மெயில் சிறப்பாக வளர என நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

## சிறந்த உள்ளூர் பத்திரிகை

**- ஜெயபால்,** பொறியாளர்



தி கோவை மெயில் பத்திரிக்கை உள்ளூர் செய்திகளை மிக அற்புதமாக வழங்கி வருகிறது. இது போன்ற பத்திரிக்கைகள் இருப்பதால் கோவையின் செய்திகள் அனைத்தும் அறியமுடிகிறது. உங்களின் சேவைகள் தொடரட்டும், அதற்கு நிச்சயமாக நாங்கள் அனைவரும் ஆதரவளிப்போம், வாழ்த்துகள்.

## மக்களின் நன்மதிப்பு

**- அனுஷா ரவி,**
தலைமை நிர்வாக அதிகாரி,
பார்க் கல்விக் குழுமம்



10 வருடங்களைக் கடந்து, தனக்கென்று தனிமுத்திரை பதித்து, கோவை மக்களின் நன் மதிப்பை பெற்று, பதினொன்றாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் கோவை மெயில் பத்திரிக்கை குடும்பத்திற்கு வாழ்த்துக்கள்.

## இன்றியமையாத பங்களிப்பு

**- ராஜா ரவி சந்திரன்,** நிர்வாக இயக்குநர்
பாரத் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் அப்ளையன்சஸ்



மக்களிடம் எங்கள் நிறுவனத்தை கொண்டு சென்றதில் தி கோவை மெயில் பத்திரிக்கையின் பங்கு இன்றியமையாதது. கடந்த பத்து ஆண்டுகளாக எங்களுடன் பயணித்து வரும் சீனிவாசன் மற்றும் அவரது நிறுவன பணியாளர்களுக்கும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் அப்ளையன்சஸ் சார்பாக வாழ்த்துக்கள் மற்றும் நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

## வெற்றி தொடர வேண்டும்

**- வைஷ்ணவி,**
இயக்குநர், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்



தி கோவை மெயில் தனது வெற்றி பயணத்தில் பத்தாண்டை நிறைவு செய்துள்ளது. இன்னும் மேலும் மேலும் வளர்ந்து நூறாவது ஆண்டை நோக்கி பயணிக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

## கண்ணியமான பத்திரிகை



**தண்டபாணி,** தலைவர்,
கோயம்புத்தூர் பார் சங்கம்

தி கோவை மெயில் பத்திரிக்கையை நான் தொடர்ந்து வாசித்து வருகிறேன். தி கோவை மெயில் பத்திரிக்கை தீவிர முயற்சியுடன் 10 ஆண்டுகளை நிறைவு செய்தது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இது ஒரு கண்ணியமான பத்திரிக்கை ஆகும். இதனின் வளர்ச்சி மென்மேலும் உயர்த்தோங்கி வளர வேண்டும் என்று எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். வாரப் பத்திரிக்கையாக வெளிவரும் தி கோவை மெயில் கூடிய விரைவில் தினசரி பத்திரிக்கையாக வெளிவர வேண்டும். வாழ்த்துகிறேன்.

## வரவேற்கத்தக்க பங்களிப்பு



**- மீனா லோகு,** தலைவர்,
மத்திய மண்டலம்

தி கோவை மெயில் பத்திரிக்கை பத்து ஆண்டுகள் நிறைவு செய்து 11வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இதற்கு எனது வாழ்த்துக்கள். நாட்டில் நடக்கக்கூடிய பிரச்னைகள், நிகழ்வுகளை மக்களிடம் தெரிவிக்கக்கூடிய பங்கு ஊடகத்துறைக்கு உண்டு. அந்தவகையில் தி கோவை மெயில் பத்திரிக்கையின் பங்களிப்பு வரவேற்கத்தக்கது. ஊடகத்துறையில் மென்மேலும் வளர எனது வாழ்த்துகள்.

## பல தகவல்கள் உள்ளடக்கியது

**- மீனா ஜெயக்குமார்,** மாநில துணைச் செயலாளர்,
திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை



பத்தாவது ஆண்டு நிறைவு காணும் தி கோவை மெயில் பத்திரிக்கைக்கும், அதன் ஊழியர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இதனை மிகச் சிறப்பான பத்திரிக்கை என நிச்சயம் சொல்வேன். கோவை செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்கும் இணைய செய்தி சேவையையும் சிறப்பாக வழங்குகிறது. தி கோவை மெயில் பத்திரிக்கையிலிருந்து பல தகவல்களைப் தெரிந்து கொள்கிறோம். தி கோவை மெயில் மென் மேலும் வளர வாழ்த்துகள்.

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர் கோவையின் பெருமை ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்ரிங்

# தி கோவை 10 YEARS மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

SREE Annapoorna SREE Gowrishankar the pride of coimbatore Restaurant - Sweets - Event Catering

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 37 | www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL | ஞாயிறு, டிச 10 - 16, 2023, 8 + 4 பக்கங்கள், ₹ 5/- | ஆண்டு சந்தா - ₹ 260/-



**5000** பேர்

**16** கிலோ மீட்டர்

**1** மணி நேரம்

மாரத்தான் போட்டியில் பங்கேற்ற கல்லூரி மாணவமாணவியர் மற்றும் பொது மக்கள்.

# மாஸ் காட்டிய

# கே.எம்.சி.ஹச் மாரத்தான்






உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை கொடி அசைத்து தொடங்கி வைக்கும் கோவை மேற்கு மண்டல ஐ.ஜி பவானீஸ்வரி, கே.எம்.சி. ஹச் தலைவர் டாக்டர். நல்ல.ஜி.பழனிசாமி, கே.எம்.சி. ஹச் துணைத் தலைவர் தவமணி தேவி பழனிசாமி, கே.எம்.சி. ஹச் மருத்துவமனை செயல் இயக்குநர் டாக்டர். அருண் பழனிசாமி உள்ளிட்ட பலர்.

✍ ப.சுகன்யா, தி கோவை மெயில்

மாரத்தான் ஓட்டத்தின் புகழ் உலகின் பல பகுதிகளில் மிகப்பெரிய அளவில் வளர்ந்துள்ளது என்றே சொல்லலாம். குறிப்பாக, இந்தியாவில் கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் ஆண்டுக்கு 500 மாரத்தான் ஓட்டங்கள் நடந்ததாக தரவுகள் தெரிவிக்கின்றன. இப்படியாக, உடல்நல ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மாரத்தான் வாயிலாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கோயம்புத்தூரின் முன்னணி மருத்துவமனைகளில் ஒன்றான கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை சார்பில் மாரத்தான் ஓட்டம் நடந்தது.

கடந்த 1991 ஆம் ஆண்டு கே.எம்.சி. ஹச் மருத்துவமனையின் தலைவர் டாக்டர். நல்ல ஜி பழனிசாமி அவர்களின் முன்னெடுப்பில் கோவையில் முதல் முறையாக மாரத்தான் போட்டி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, மக்களின் அமோக பங்களிப்பில் ஆண்டு தோறும் சுகாதாரம், ஆரோக்கியம் சார்ந்த புதிய தலைப்புடன் கூடிய மராத்தானை நடத்துவது வழக்கம். அந்த வகையில், இந்த ஆண்டு "உடல் உறுப்பு தானம்" என்கிற தலைப்பில் உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவங்கள் குறித்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டி ஒருங்கிணைக்கப்பட்டது.

சூலூர் பகுதியில் இயங்கி வரும் கே.எம்.சி. ஹச் மருத்துவமனையில் தொடங்கிய போட்டி அவினாசி சாலையில் உள்ள கே.எம்.சி. ஹச் மருத்துவக் கல்லூரியில் நிறைவடைந்தது. சுமார் 16 கிலோ மீட்டர் தூரம் நடைபெற்ற மாரத்தான் ஓட்டத்தில் ஆண்கள், பெண்கள், சிறுவர் சிறுமியர், மாணவமாணவியர் என 4,000த்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கு, சிறப்பு விருந்தினராகக் கோவை மாவட்ட மேற்கு மண்டல ஐ.ஜி பவானீஸ்வரி பங்கேற்று கொடியினை அசைத்து மாரத்தான் போட்டியைத் தொடங்கி வைத்தார்.




## டாக்டர். நல்ல.ஜி.பழனிசாமி,
### தலைவர், கே.எம்.சி. ஹச் மருத்துவமனை



நிகழ்ச்சி குறித்துப் பேசிய கே.எம்.சி. ஹச் மருத்துவமனையின் தலைவர் டாக்டர். நல்ல ஜி பழனிசாமி, பொதுமக்களிடம் உடல்நலன் பேணுதல் மற்றும் நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே 27வது ஆண்டாக மாரத்தானை போட்டியை நடத்தி வருகிறோம். கே.எம்.சி. ஹச் மருத்துவமனையில் உடல் உறுப்பு தானத்துக்கு முக்கியத்துவம் தருகிறோம். மேலும், நுரையீரல், சிறுநீரகம், இருதயம் உள்ளிட்ட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்து வருகிறோம் என்றார்.

## பவானீஸ்வரி, ஐ.ஜி மேற்கு மண்டலம்



இதுபோன்ற விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை கே.எம்.சி. ஹச் மருத்துவமனை சார்பில் ஒருங்கிணைத்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்று. குறிப்பாக, 27 ஆண்டாக இந்த போட்டி நடந்து வருவது வியத்தகு விசயம் என்றவர்., போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்தார்.

## டாக்டர். அருண் பழனிசாமி,
### செயல் இயக்குநர், கே.எம்.சி. ஹச் மருத்துவமனை




பல்வேறு நோய்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இதுபோன்ற மாரத்தான்கள் நடத்துகிறோம். உடலுறுப்புகளை தானம் செய்வதன் முக்கியத்துவம் குறித்தும் அது எவ்வாறு விலைமதிப்பற்ற உயிர்களைக் காத்திட உதவுகிறது என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவும் இந்த வருட மாரத்தான் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுப் பேசினார்.

போட்டியின் முடிவில், மாராத்தான் நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுத் தொகையும் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

> ”
> **கடந்த 1991 ஆம் ஆண்டு கே.எம்.சி. ஹச் மருத்துவமனையின் தலைவர் டாக்டர். நல்ல.ஜி.பழனிசாமி அவர்களின் முன்னெடுப்பில் கோவையில் முதல் முறையாக மாரத்தான் போட்டி நடைபெற்றது.**






# பக்தி புத்திசாலித்தனமா..!?

தன்னை உணர்வது தற்போதுள்ள சூழலில் ஏன் கடினமாகிப் போனது என சென்ற வார உரையாடலைத் தொடரும் சத்குரு, அன்பு குறித்தும் பக்தி குறித்தும் சேகர் கபூரின் கேள்விக்கு விடையளிக்கிறார் இந்த வாரப் பதிவில்.

சத்குருவுடன் சேகர் கபூர்

சத்குரு: இந்தக் கலாச்சாரத்தில் முன்பெல்லாம் ஆன்மீக செயல்முறைதான் மிகவும் முக்கியமானதாக இருந்தது. அதனால் எங்கு பார்த்தாலும் ஞானிகளும் முனிவர்களும் பரவலாக இருந்தனர். கிருஷ்ணர் மட்டுமே ஆன்மீக வளர்ச்சிக்காக 1400 ஆசிரமங்களை இந்தியாவின் வட பகுதிகளில் உருவாக்கியிருந்தார் என்று சொல்கிறார்கள்.

சிறிது காலத்திற்கு முன் கிராமத்திற்கு ஒருவர்தான் படிக்கத் தெரிந்தவராக இருப்பார். நான் கர்நாடகாவில் இருக்கும்போது ஒரு பண்ணை வைத்திருந்தேன். அந்த கிராமத்தில் ஒருவருக்கு மட்டுமே படிக்கத் தெரியும். எனவே கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் தங்களுக்கு வரும் கடிதங்களை, ஒரு மனைவி தனது கணவனுக்கு எழுதிய கடிதம் உட்பட, அந்த குறிப்பிட்ட மனிதரிடம் சென்றுதான் படிக்கச் சொல்லிக் கேட்பர். கல்வியறிவு என்பது அவ்வளவு அரிய விஷயமாக அப்போது இருந்தது. கல்வியறிவு பெறுவதற்கான ஸ்தாபனம் போதுமானதாக இல்லை. எனவே யாரோ ஒருவர் ஒரு கடிதத்தை படித்து சொல்லும்போது மற்றவர்கள் அதை ஏதோ ஒரு அற்புதமாக பார்த்தார்கள்.

இப்போது நீங்கள் பேசுவதும் அப்படித்தான் இருக்கிறது. 'ஏன் அவ்வளவு கடினமாக இருக்கிறது' என்று கேட்கிறீர்கள். உண்மையில் அது கடினமில்லை. உள்நிலையில் பயணிப்பதற்கான வழிமுறையை, தற்போதைய சமூகம் பராமரிக்கத் தவறிவிட்டது. இளம் வயதிலிருந்தே அதற்கான பாதையில் நீங்கள் இல்லாதபடியால், இப்போது அது மிகவும் கடினமாகத் தெரிகிறது.

இக்கால சமுதாயங்கள் எதுவுமே ஆன்மீக வளர்ச்சிக்கான வழிமுறைகளை உருவாக்கப் போதுமான முயற்சிகள் மேற்கொள்ள வில்லை. பள்ளி, மருத்துவமனை என்று அனைத்தும் உருவாக்குகிறோம். ஆனால் நமது உண்மையான நலனான உள்நலனுக்குத் தேவையான வழிமுறைகளை உருவாக்க மட்டும் இந்த சமூகம் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. நாம் இப்போது அதைத்தான் செய்ய முயற்சிக்கிறோம். ஆன்மீக வளர்ச்சிக்கான ஒரு வழிமுறையை உருவாக்க முயற்சிக்கிறோம்.

சேகர்: சத்குரு, அன்பு பற்றி ஒரு கேள்வி. நான் உங்களுடன் தியானலிங்கத்திற்கு வந்தபோதும் சரி, உங்களுடைய யோக வகுப்பில் கலந்து கொண்டபோதும் சரி, மக்கள் உங்களைப் பார்த்தவுடன், தூரத்திலிருந்து பார்த்தாலும் கூட, திடீரென்று அவர்களிடமிருந்து அன்பு பெருக்கெடுக்கிறது. அப்போது அங்கு என்ன நடக்கிறது? மனஅழுத்தத்தில் இருந்தும், பல உணர்ச்சிகளிலிருந்தும் விடுதலை அடைகிறார்களா? அல்லது நீங்கள் ஏதாவது அவர்களுக்கு சக்தியைப் பரிமாற்றம் செய்கிறீர்களா?

சத்குரு: வாழ்க்கை ஒருவிதமான சக்தியாக இருக்கிறது. நீங்கள் ஒருவிதமான சக்தியாக இருக்கிறீர்கள். உங்கள் சக்தி எண்ணமாக, உடலின் செயல்களாக, உணர்ச்சிகளாக, மேலும் சக்தியின் செயல்களாக பல்வேறு வகைகளில் வெளிப்படுகிறது.

இவையெல்லாமே தீவிரத்தின் வெவ்வேறான நிலைகள். உடல்தன்மை ஒருவிதமான தீவிரத்தில் இருக்கிறது. புத்திக்கூர்மை ஒருவிதமான தீவிரத்தில் இருக்கிறது. உணர்ச்சி வேறொரு விதமான தீவிரத்தில் இருக்கிறது. பொதுவாக மக்கள் உணர்ச்சியை, புத்திக்கூர்மையை விட குறைத்தே மதிப்பிடுகிறார்கள். இது மிகவும் தவறானது. அறிவாற்றலை விட உணர்ச்சி பல வழிகளில் அதிக தீவிரத்துடன் இருக்கமுடியும். புத்திக்கூர்மைக்கு ஒருவித உணர்ச்சியற்ற, பிரித்தறியும் குணம் உண்டு. ஆனால் உணர்ச்சியோ எவ்வித வரம்பும் இன்றி அனைத்தையுமே அரவணைத்துக் கொள்ளும். புத்திக்கூர்மையால் வாழ்க்கையின் சில பகுதிகளைத் மட்டுமே புரிந்து கொள்ள முடியும், ஆனால் உணர்ச்சியால் வாழ்க்கையை அதன் முழுமையில் அறிந்து கொள்ள முடியும். இந்தக் காரணத்தினால்தான் ஆன்மீகக் கலாச்சாரம் எப்போதுமே பக்திக்கு முக்கியத்துவம் தருகிறது. ஒரு அறிவாளி ஒரு பக்தரை முட்டாளாகத்தான் பார்க்கிறார். ஆனால் வாழ்க்கை அனுபவத்திலும், வாழ்க்கையை உணரும் விதத்திலும் ஒரு பக்தர் அறிவதை எல்லாம், ஒரு அறிவாளியால் எப்போதும் உணரவே முடியாது. எனவே ஒரு பக்தர் பார்ப்பதற்கு ஒரு முட்டாள் போல் தெரிவார், ஆனால் உண்மையான முட்டாள் வேறெங்கோ இருக்கிறார் (சிரிக்கிறார்).

> **புத்திக்கூர்மையால் வாழ்க்கையின் சில பகுதிகளைத் மட்டுமே புரிந்து கொள்ள முடியும், ஆனால் உணர்ச்சியால் வாழ்க்கையை அதன் முழுமையில் அறிந்து கொள்ள முடியும். இந்தக் காரணத்தினால்தான் ஆன்மீகக் கலாச்சாரம் எப்போதுமே பக்திக்கு முக்கியத்துவம் தருகிறது**

சேகர்: சரி....

சத்குரு: மக்கள் என்னை சுற்றி இருக்கும்போது அங்கு நிகழ்வது சக்தியின் அதிர்வு மட்டுமே. நான் ஒரு விதமான அதிர்வை ஏற்படுத்தினால், சிலர் தங்கள் கருவிழிகளை மேலே உயர்த்தி அப்படியே அமர்ந்திருப்பார்கள், சிலர் அழுவார்கள், சிலர் சிரிப்பார்கள், சிலர் அந்த இடத்தில் பல விஷயங்களை அறிந்துகொண்டதாக உணர்கிறார்கள். இவையெல்லாம் அவர்கள் வெளிப்படுத்தும் விதம். மின்சாரத்தின் உதவி கொண்டு சிலர் வெளிச்சத்தை ஏற்படுத்துகிறார்கள், சிலர் சப்தத்தை ஏற்படுத்துகிறார்கள், சிலர் குளிர்ச்சியை ஏற்படுத்துகிறார்கள், சிலர் உஷ்ணத்தை ஏற்படுத்துகிறார்கள். ஆனால் மின்சாரம் ஒன்றுதான். எனவே என்னுடைய பணி சக்தியை வெளிப்படுத்துவது மட்டுமே. சிலர் அதைக் கொண்டு அன்பை வெளிப்படுத்துகிறார்கள், சிலர் விழிப்புணர்வை வெளிப்படுத்துகிறார்கள், சிலர் தியானத் தன்மையை வெளிப்படுத்துகிறார்கள். இது அந்தந்த நபர்களின் வளர்ச்சி நிலையையும் ஏற்றுக்கொள்ளும் தன்மையையும் பொறுத்து அமைகிறது.

எனவே, நான் ஒரு அன்பான சக்தியை உருவாக்குகிறேனா? அன்பான சக்தி என்று எதுவும் இல்லை, அங்கு உயிர் சக்தி மட்டுமே உள்ளது. அன்பு என்பது அறிவு, உடல் செயல், விழிப்புணர்வு என்று லட்சக்கணக்கான வழிகளில் வெளிப்பட முடியும். ஆனால் மக்கள் ஒன்றைவிட மற்றொன்று சிறந்தது என்று புகழ்கிறார்கள். இது மிகவும் தவறாகும்.

மக்கள் இப்போது 'அன்பே இந்த பிரபஞ்சத்தின் நோக்கம்' என்று பேசுவது வழக்கமாகிவிட்டது. அன்பு என்பது மனிதனின் ஒரு உணர்ச்சி. அன்புக்கும் பிரபஞ்சத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அன்பு என்பது உங்கள் உணர்ச்சியின் இனிப்பான தன்மை, அவ்வளவுதான்.

உங்கள் உடல் இனிமையாக இருந்தால் அது ஆரோக்கியம். அதேபோல் உங்கள் மனம் இனிமையாக இருந்தால் அமைதி, மிகவும் இனிமையாக இருந்தால் மகிழ்ச்சி. உங்கள் உணர்ச்சி இனிமையாக இருந்தால் அன்பு, மிகவும் இனிமை அடைந்தால், கருணை அல்லது பக்தி. உங்கள் சக்திநிலை மிக இனிமையாக இருந்தால் ஆனந்தம்.

மிக மிக இனிமையாக இருந்தால் பேரானந்தம். என் அருகில் ஒரு சிலர் பேரானந்த நிலையை அடைகிறார்கள். ஒரு சிலர் அன்பான நிலையை அடைகிறார்கள். சிலர் விழிப்பான நிலையை அடைந்து தியானத் தன்மைக்கு செல்கிறார்கள். ஆனால் இது அவர்கள் செய்வது.



அவர்களுடைய கருவி அப்படி செயல்படுகிறது. நான் செய்வதெல்லாம், உயிர் சக்தியை மிகத் தீவிரமாக வெளிப்படுத்துவதுதான்.

## கல்லுக்குள் ஈரம் மேடையில் அழுத அதிபர் கிம் ஜாங் உன்



வடகொரியாவின் மக்கள் தொகை 2.61 கோடி மட்டும்தான் பரப்பளவில் மிகவும் சிறிய நாடு. ஆனால், உலக ஊடகங்கள், சமூக வலைத்தளங்களை எப்பொழுதும் ஆக்கிரமித்துக் கொள்ளும் செய்திகளின் தலையகமாக இருப்பவர் வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன். உலக தலைவர்களிடம் இருந்து சற்று வித்தியாசமானவரும் கூட. வெளி உலக தொடர்பே இல்லாத தலைவர். மக்களையும் அவ்வாறே வழிநடத்தி வருபவர். உலக நாடுகள் அமெரிக்காவை எதிர்க்க ஒரு நொடியேனும் தயக்கம் காட்டும். இதற்கு விதிவிலக்கு கிம் ஜாங் உன். நீ..என்ன சொல்வது..? என்பது போல் எதற்கும் அஞ்சாமல் ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறவர். இப்படியான, சர்வாதிகார ஆட்சி நடத்தும் கிம் ஜாங் உன் கண்ணீர் விடும் காட்சிகள் ஊடகங்களில் பரவிப் பேசும் பொருளாகியுள்ளது.

வடகொரியாவில் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது. சொல்லப்போனால், **1970-80** காலகட்டத்தில் அந்நாட்டின் மக்கள் தொகை அதிகரிப்பதை தடுப்பதற்காக அப்போதைய அரசு தீவிரமாக நடவடிக்கைகளை அமல்படுத்தியது. இந்நிலையில், பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற கிம் ஜாங் உன், நம் நாட்டில் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது. நம் நாட்டை பாதுகாக்கப் பெண்கள் அதிகமாக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். குழந்தைகளை பராமரித்து நன்றாக வளர்த்து முறையான கல்வியை வழங்க வேண்டும். இதற்கான திட்டங்களை வகுத்து அதனை நடைமுறைப்படுத்த தயாராக இருக்கிறேன் என்றவர் கண்கலங்கினார். இந்த நிகழ்வுதான் தற்போது வலைதள வாசிகள் மத்தியில் டாக் ஆப் தி டவுன் ஆக இருக்கிறது. கல்லுக்குள் ஈரம் என்றும் கமெண்ட் செய்து வருகின்றனர்.



## PSG Hospitals' Pioneer Dr. Ananthanarayanan Performs

# World's First Robotic Congenital Heart Surgery



Dr. C. Ananthanarayanan, a Senior Consultant Cardiac Surgeon at PSG Hospital, has successfully performed the world's first Robotic Congenital Heart Surgery, marking a significant milestone in cardiac care. In an exclusive interview, he emphasized the potential and advantages of Robotic Surgery over traditional methods.



**Transition from Sternotomy to Minimally Invasive Robotic Procedures:-**

Dr. Ananthanarayanan highlighted the unprecedented use of surgical robots to treat complex congenital heart diseases. This achievement breaks boundaries in the field, as surgical robots were previously used mainly for adult patients and their diseases. The precision of robotic vision played a crucial role in achieving results comparable to traditional sternotomy approaches.


The transition from traditional open-heart surgery, which requires sternotomy, to minimally invasive procedures has been rapid due to technological advancements. Dr. Ananthanarayanan emphasized that Robotic Heart Surgery represents the next evolutionary step, allowing surgeons to perform intricate procedures with enhanced precision and minimal invasiveness.

**Minimal Blood Product Utilization:-**

The advantages of Robotic Heart Surgery are evident in the post-operative experience for patients. A notable benefit is the substantial reduction in post-operative pain, enabling a quicker return to normal activities. Unlike traditional heart surgeries which requires prolonged rest, patients undergoing Robotic Heart Surgery can resume regular activities within two weeks, significantly enhancing overall recovery times.

Another key advantage lies in the minimal utilization of blood products during Robotic Heart Surgery.

Unlike conventional surgeries that often require blood transfusions, this breakthrough reduces or eliminates the need for such transfusions. This not only benefits patients but also contributes to more efficient healthcare practices, conserving resources and minimizing risks associated with blood transfusions.



**Life-altering Success Story:-**


The success stories exemplify the effectiveness of Robotic Heart Surgery. A 15-year-old girl with a complex birth defect named "Partial Atrio-Ventricular Canal Defect (P-AVCD)" underwent successful surgery to correct three defects inside her heart. Dr. Ananthanarayanan and his team, assisted by Robotic Thoracic Surgeon Dr. Saravana Rajamanickam, utilized a Surgical Robot to repair an underdeveloped valve, close a hole between upper heart chambers, and fix a malformed Tricuspid valve. Remarkably, the patient was discharged in just three days and is on track to resume studies within a week.

**Unlike traditional heart surgeries which requires prolonged rest, patients undergoing Robotic Heart Surgery can resume regular activities within two weeks, significantly enhancing overall recovery times.**

Dr. Ananthanarayanan anticipates even more complex procedures becoming feasible through Robotic Heart Surgery in the future. PSG Hospital's advanced robotic systems lay the foundation for further advancements in this cutting-edge field. The versatility of Robotic Heart Surgery offers expanded treatment options, providing patients with safer and more effective alternatives.

**A New Era in Cardiac Care:-**

In conclusion, Robotic Heart Surgery has ushered in a new era of cardiac care, offering enhanced outcomes, reduced pain, and quicker recovery times. PSG Hospitals, guided by Dr. Ananthanarayanan, have emerged as pioneers in this revolutionary approach, shaping the future of cardiovascular surgery. As robotic technology is embraced by the medical community, routine performance of even the most intricate cardiac procedures can be anticipated with the remarkable precision and efficiency of robotic-assisted surgery.



***- Dr. C. Ananthanarayanan,***
*Senior Consultant Cardiac Surgeon, PSG Hospital*



## இது வாட்ஸ் அப்பின் புதிய ‘அப்டேட்’

மெட்டாவின் தலைமை நிர்வாக அதிகாரியான மார்க் ஜுக்கர்பெர்க், அதன் சமூக ஊடக தளங்களான ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ் அப்பின் புதுவித அம்சங்களைத் தடையின்றி வழங்க முனைப்புக் காட்டி வருகிறார். அந்த வகையில், வாட்ஸ் அப் தளத்தில் பயனாளர்கள் அனுபவங்களை மேம்படுத்தக் கூடுதல் அம்சங்கள் அறிமுகமாகியுள்ளது. வாட்ஸ் அப் பயனர்களை விரைவில் அவர்களின் ஸ்டேட்டஸ், புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை இன்ஸ்டாகிராமில் ஷேர் செய்யும் வகையில் புதிய அப்டேட் நடைமுறைக்கு வரவுள்ளது.

இந்த அம்சம் தற்போது ஆண்ட்ராய்டுக்கான பீட்டா சோதனையில் உள்ளது. மேலும், வாட்ஸ் அப்பில் புதிய ஏஐ (செயற்கை நுண்ணறிவு) சாட் அம்சங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது. பயனர்கள் ஏஐ சாட்போட் உடன் ஈடுபட இது உதவுகிறது. மெட்டா ஏஐ எனப்படும் அதிநவீன ஏஐ தொழில்நுட்பத்தை, மெட்டாவின் பல தளங்களில் ஒருங்கிணைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆயுதப்படை குடியிருப்பு வளாகத்தில் சிறுவர் பூங்கா திறப்பு

கோவை மாநகர ஆயுதப்படை குடியிருப்பு வளாகத்தில் புதுப்பிக்கப்பட்ட சிறுவர் பூங்காவின் திறப்பு விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவிற்கு மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன் தலைமை வகித்து, பூங்காவினை திறந்து வைத்தார்.

இப்பூங்காவில் குழந்தைகள் விளையாடுவதற்கான பிளைன் ஸ்லைட், வெவ் ஸ்லைட், டபுள் ஸ்விங், டபுள் சீசா, மேரி கோ ரவுண்டு ஆகிய விளையாட்டு உபகரணங்கள் புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே, கடந்த 26.05.2023 ஆம் தேதியன்று கோவை மாநகர ஆயுதப்படை வளாகத்தில் சிறுவர் பூங்கா திறக்கப்பட்ட நிலையில், இரண்டாவதாக இன்று மேற்படி புதிய சிறுவர் பூங்காவும் திறக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்திறப்புவிழாவில் கோவை மாநகர ஆயுதப்படை காவல் உதவி ஆணையர் சேகர், மோட்டார் வாகனப்பிரிவு காவல் ஆய்வாளர் கோவிந்தராஜு, இருபால காவல் ஆளிநர்கள் மற்றும் காவலர் குடும்பத்தினர் பலர் கலந்துகொண்டனர்.

## இந்தியாவில் பாதுகாப்பான நகரம் எது?

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையின்படி 3 ஆவது ஆண்டாக இந்தியாவின் பாதுகாப்பான நகரமாக கொல்கத்தா அறிவிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் பேரில் 103.4 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இது தற்போது 86.5 ஆக குறைந்துள்ளது. அதே வேலையில், தலைநகர் டெல்லியில் சைபர் குற்றங்கள் இரண்டு மடங்காக அதிகரித்து விட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2021ல் சைபர் குற்றங்களின் எண்ணிக்கை 345 ஆக இருந்தது தற்போது 685 ஆக உயர்ந்துள்ளது.

# தொழில்நுட்பத்தின் தகவல் பரிமாற்ற கருத்தரங்கம்



நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்கள் மற்றும் இந்துஸ்தான் கல்லூரி நிர்வாகிகள்.

இந்துஸ்தான் பொறியியல், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் டெய்லர் பல்கலைக்கழகம், கோலாலம்பூர், மலேசியாவுடன் இணைந்து சர்வதேச கருத்தரங்கம் TESS-2023 “டிரான்ஸ்போர்மிங் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் பார் சஸ்டைனபிலிட்டி” என்ற தலைப்பில் நடைபெற்றது.

நிலைத்தன்மைக்கான பொறியியல் அமைப்புகளை மாற்றுவதற்கான சர்வதேச மாநாட்டின் (TESS-2023) நோக்கம், உலகெங்கிலும் உள்ள ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், கல்வியாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் தங்கள் நிபுணத்துவம், திறமைகள் மற்றும் புதுமையான யோசனைகளை வெளிப்படுத்த இந்த கருத்தரங்கம் வழி காட்டுகிறது.கருத்தரங்கில் மலேசிய டெய்லர் பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறை தலைவர் பேராசிரியர் டாக்டர் சிம் யீ வையின் வரவேற்புரை வழங்கினார்.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலிருந்து ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் என 750க்கும் மேற்பட்ட கட்டுரைகள் பெறப்பட்டன. இதில் சிறந்த ஆராய்ச்சி கட்டுரைகளைத் தேர்வுசெய்து, பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, மலேசியாவில் உள்ள முன்னணி சர்வதேச பல்கலைக் கழகங்களான மல்டிமீடியா பல்கலைக்கழகம், ஏஐஎம்எஸ்டி பல்கலைக்கழகம் (பினாங்) மற்றும் சைபர்ஜெயா பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. இது மாணவர்கள் மற்றும் ஆசிரிய உறுப்பினர்களின் தொழில்நுட்ப பரிமாற்றம், செயற்கை நுண்ணறிவு, ஐஓடி, எலக்ட்ரிக் வாகனம், வயர்லெஸ் கம்யூனிகேஷன், ட்ரோன் தொழில்நுட்பம், ரோபோடிஸ் (இயந்திர மனிதன்) வடிவமைப்பு போன்ற சமீபத்திய மேம்பட்ட தொழில்நுட்பத்தின் தகவல்களைப் பரிமாற்றம் செய்து கொள்ள வழிவகை செய்கிறது. இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் அறங்காவலர் சரசுவதி கண்ணையன் மற்றும் இணை செயலாளர் பிரியா சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு மாணவ மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பாக நிதி உதவி வழங்கி ஊக்கப்படுத்தினர்.

மேலும், இதில் கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி கருணாகரன், கல்லூரி முதல்வர்கள் ஜெயா முதல்வர் மற்றும் நடராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# பொருளாதார மந்தநிலை; வேலை பறிபோகும் அபாயம்!



அமெரிக்கா போன்ற உலகின் வளர்ந்த நாடுகளும், வளரும் நாடுகளும் கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்திக்கும் என பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சமீபத்தில் அமெரிக்க அரசுக்கு ஏற்பட்ட கடன் உச்சவரம்பு நெருக்கடி சர்வதேச நிதி சந்தையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

உலகமே கண்டு வியக்கும் பெரும் பணக்கார நாடு, பொருளாதார வல்லரசு நாடு என்பன போன்ற பெருமைகளை கொண்ட அமெரிக்காவை ஆளும் ஜோ பைடன் அரசு செலவிடப் பணம் இல்லாத நெருக்கடி நிலையை எதிர்கொண்டிருக்கிறது போன்ற செய்திகள் வெளியாகி விவாதத்தைக் கிளப்பியது.

முன்னதாக, இலங்கை அரசு நிதி நெருக்கடியில் சிக்கியது. அதனால் மக்கள் கிளர்ச்சி வெடித்தது. அதனை சமாளிக்க உலக வங்கி, இந்தியா போன்ற நட்பு நாடுகளிடம் கடன் பெற்றது.

அதைத் தொடர்ந்து பாகிஸ்தான் கடன் நெருக்கடியில் சிக்கித் தவித்தது போன்ற பொருளாதார பிரச்னைகளை சந்தித்தது நாடுகளின் நிலைமைகளைக் கண்ணுற பார்த்தோம்.

இதற்கிடையில், உலக அளவில் பொருளாதாரம் ஒரு சரிவை சந்திக்கும் என பல்வேறு நிதி ஆதார அமைப்புகளும் பொருளாதார வல்லுநர்களும் எச்சரிக்கை விடுத்திருந்தன. உலக அளவிலான சில முக்கியமான வங்கிகள் மற்றும் முன்னணி நிறுவனங்கள் பொருளாதார சரிவை சந்தித்து மட்டுமல்லாமல் சிலிகான் வேலி வங்கி, சுவிட்சர்லாந்தின் கிரெடிட் சூயஸ் வங்கி போன்ற உலகின் புகழ்மிக்க வங்கிகள் திவாலானது.

அதோடு, கடந்த சில மாதங்களுக்கு முன்பு உலகின் முன்னணி நிறுவனங்களான ஆப்பிள், மைக்ரோசாப்ட், ஆல்பபெட், அமேசான் ஆகிய நிறுவனங்கள் மொத்தமாக 4.6 டிரில்லியன் டாலர் அளவிற்கு சந்தை மதிப்பு இழப்பை சந்தித்துள்ளன. இதுமட்டுமல்லாமல், மெட்டா, எக்ஸ் தளம் (ட்விட்டர்), கூகுள், அமேசான் போன்ற நிறுவனங்கள் நிதி நிலைமையை சமாளிக்க ஆட்குறைப்பு நடவடிக்கையில் இறங்கியது.

**மூலதனங்களின் விலை உயர்வு**

இந்த வரிசையில், இந்தியாவில் ஆடியோ ஸ்ட்ரீமிங் சந்தையில் சுமார் 26 சதவீத பங்கை கொண்டுள்ள ஸ்பாட்டிஃபை ஆட் குறைப்பை நடவடிக்கையில் இறங்கியது மட்டுமல்லாமல் 17 சதவீத ஊழியர்கள் உடனடியாக வேலையை விட்டுச் செல்லுமாறு அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி டேனியல் ஏக் கேட்டுக் கொண்டுள்ளார்.

உலக பொருளாதாரம் வியத்தகு அளவில் குறைந்துள்ளது மற்றும் மூலதனங்களின் விலை உயர்வு ஆகிய காரணிகளால் இந்த ஆட்குறைப்பு நடவடிக்கை எனக் குறிப்பிடுகிறார்.

இது ஒரு புறம் இருக்க இந்தியாவின் முன்னணி நிறுவனமான எட்டெக் பைஜூஸ் நிறுவனமும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது. பைஜூ நிறுவனத்தின் நிறுவனர் ரவீந்திரன், ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காகத் தனது வீட்டையும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் சொந்தமான வீட்டையும் அடைமானம் வைத்துப் பணத்தைத் திரட்டி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ரஷ்யா உக்ரைன் போர், இஸ்ரேல் ஹமாஸ் போர் காரணமாக சர்வதேச பொருளாதாரமானது மந்தநிலையில் காணப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், நிதி உள்ளிட்ட பல செலவீனங்களை கட்டுப்படுத்த மிகப்பெரிய நிறுவனங்கள் ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

இது ஐ.டி. ஊழியர்கள் மட்டுமல்லாமல் அனைத்து தரப்பிலும் வேலை பறிபோகுமா.? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.




# லாபத்தை அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்?





ராம்குமார் சிங்காரம்,
எழுத்தாளர்,
தன்னம்பிக்கை பேச்சாளர்

> ஒரு நிறுவனத்தின் லாபம் அதிகரிக்க வேண்டுமானால் வருமானம் உயர்ந்தால் மட்டுமே போதாது. வருமானத்தின் காலை பின்னால் பிடித்து இழுக்கும் செலவுகளையும் குறைக்க வேண்டும்.



உங்கள் தொழிலின் லாபம் அதிகரிக்க வேண்டுமா? அதைச் செய்ய வழி தெரியாமல் தான் இங்கே இருக்கிற அத்தனை பேரும் பாடாய்ப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை படித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு மட்டும் அந்த ரகசியத்தைச் சொல்கிறேன், அருகே வாருங்கள்.

ஒரு நிறுவனத்தின் லாபம் அதிகரிக்க இரண்டு வழிகள் இருக்கின்றன. அதில் முக்கியமானது, விற்பனையை அதிகரித்து, அதன் மூலம் நிகர லாபத்தைப் பெருக்குவது. இது தரமான பொருட்களைத் தருவது, பரவலாக விளம்பரம் செய்வது, வாடிக்கையாளர் திருப்தி என்று பலதுறைகள் சம்பந்தப்பட்டது. இது வெளி லாபம் ஆகும் .

உள் லாபம் ஒன்று உண்டு. இப்படிச் சொன்ன உடனே, 2ம் நம்பர் கணக்கு, உடனிருக்கும் பார்ட்னரை ஏய்ப்பது இப்படியெல்லாம் தப்பாக யோசிக்க வேண்டாம்.

ஓகே. அது என்ன உள் லாபம்..? இதோ, இந்தியாவின் முன்னாள் நிதி அமைச்சர் ப. சிதம்பரம் சொன்னதைக் கேளுங்கள்.

“இந்தியாவின் துணை நிதியமைச்சராக இருந்தபோது அரசு முறைப் பயணமாக ஜப்பான் சென்றிருந்தேன். அங்கிருந்த மிகப் பெரிய ஆட்டோமொபைல் நிறுவனம் ஒன்றிற்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. உலகம் முழுக்க பிரசித்திபெற்ற கார்களைத் தயாரிக்கும் அந்தத் தொழிற்சாலையின் நிறுவனர் 90 வயது கொண்ட முதியவர். அவர் ஓய்வு ஏதும் எடுக்க விரும்பவில்லை. தான் விரும்பி வளர்த்த நிறுவனத்தை அந்த வயதிலும் தானே நிர்வகிக்க விரும்பி, தினமும் அரை நாள் அலுவலகத்திற்கு வந்து கொண்டிருந்தார்.

பரந்து விரிந்த நிறுவனம் அது. ஆயிரக்கணக்கில் ஊழியர்கள் பணியாற்றும் அந்த நிறுவனத்தில் இந்தப் பெரியவர் நாள்தோறும் எந்தத் துறையில் கவனம் செலுத்துவார்? அனேகமாக விற்பனைப் பிரிவாகத் தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. காரணம், ஒரு நிறுவனம் மாபெரும் வெற்றியைப் பெற்று உலக அளவில் முன்னணியில் இருக்கும் போது, அந்த நிறுவனத்தின் நிறுவனர், தினமும் தொழிற்சாலைக்கு வந்து போகிறார் என்றால், மிக முக்கியமான துறையைத் தானே தனக்கென தேர்ந்தெடுப்பார்.

அப்படி அவர் அந்த அரை நாளில் எந்தத் துறையில் இன்னமும் கவனம் செலுத்துகிறாரோ, அந்தத் துறைதான் மொத்த தொழிற்சாலையின் வெற்றிக்கே காரணமாக இருக்க முடியும். இதனைத் தெரிந்து கொண்டே தீர வேண்டும் என்ற ஆவலில் அந்தப் பெரியவரைச் சந்தித்து என் சந்தேகத்தை கேட்டேன்.

“ஐயா ! இந்த வயதிலும் நீங்கள் அலுவலகத்திற்கு வந்து என்ன வேலை செய்கிறீர்கள்? உற்பத்தித் துறையில் கவனம் செலுத்துவீர்களாஞ்? அல்லது நிதித் துறையில் கவனம் செலுத்துவார்களா? அல்லது தொழிலாளர் நலனிலா? இதில் எந்தத் துறை உங்கள் வெற்றிக்கு அடிப்படை?” என்று கேட்டேன்.

சிறிய சிரிப்போடு என்னை நிமிர்ந்து பார்த்தார். “நீங்கள் சொல்கிற எல்லாமே முக்கியமான துறைகள்தான். ஆனால், இதில் எந்தத் துறையிலும் நான் நேரடியாகக் கவனம் செலுத்துவதில்லை. நான் பின்வாசல்காரன்!” என்று சிரித்தார்.

புரியாமல், “அப்படியானால், நீங்கள் அலுவலகம் வந்து என்ன செய்வீர்கள்..?” என்று கேட்டேன்.

நிறுவனத்தின் ஓட்டைகளை அடைபவன் நான். இங்கே வருவாய் வாசலைக் கவனிக்க, பலர் இருக்கிறார்கள். செலவு என்ற பின்வாசல் பலருக்குத் தெரிவதில்லை. நான் கவனம் செலுத்துகின்ற ஒன்று, இந்நிறுவனத்தின் செலவுகளை எப்படி குறைப்பது என்பதில் மட்டும்தான். நாள்தோறும் நான் செலவு விவரம் அனைத்தையும் பெற்றுக்கொண்டு தேவையற்ற செலவுகளை குறைத்துக் கொண்டே இருப்பேன்.

100 ரூபாய் வருமானம் வருகிற இடத்தில் செலவுகள் 90 ரூபாய் என்றால் 10 ரூபாய்தான் லாபம் கிடைக்கும். வருமானத்தை 130 ரூபாய் ஆக்க அதற்கான பிரதிநிதிகள் பாடுபடலாம் அப்படி செய்யும் போது, கூடவே செலவுகளும் 120 ரூபாய்க்கு உயர்ந்து விடலாம். பேப்பரில் வருமானம் உயர்வு காட்டுவதை விட, பாக்கெட்டுக்கு வந்து சேரும் லாபம் தான் முக்கியம்.

ஒரு நிறுவனத்தின் லாபம் அதிகரிக்க வேண்டுமானால் வருமானம் உயர்ந்தால் மட்டுமே போதாது. வருமானத்தின் காலை பின்னால் பிடித்து இழுக்கும் செலவுகளையும் குறைக்க வேண்டும். தொழிற்சாலையில் வேலை பார்க்கின்ற அனைத்து ஊழியர்களும் வருமானத்தை அதிகரிக்க வைத்துக் கொண்டிருப்பார்கள். நான் செலவுகளை குறைத்துக் கொண்டு இருக்கிறேன். அதனால், நிறுவனத்தின் லாபம் இரு மடங்காக உயர்கிறது. இது, எங்கள் வெற்றியின் ரகசியம் மட்டுமல்லஞ் நாங்கள் முன்னணி நிறுவனமாக சோர்வின்றி சென்று கொண்டிருக்கும் ரகசியமும் கூட” என்றார்.

சில ஆண்டுகளுக்கு முன் திரு. ப. சிதம்பரம் தனியார் வங்கி ஒன்றின் பொன்விழாக் கொண்டாட்டத்தின் போது கூறிய இந்த விஷயம், பெருநிறுவனங்களுக்கு மட்டும்மல்லாது, சிறிய ஸ்தாபனங்களுக்கும் பொருந்தும்.

ஒரு நிறுவனத்தின் லாபம் அதிகரிக்க இன்றைக்கு எண்ணற்ற நிர்வாக உத்திகள் கையாளப்படுகின்றன. ஆனால், செலவைக் குறைப்பதற்கு பலரும் முக்கியத்துவம் தருவதில்லை.

பத்து ரூபாயை நாம் வருமானமாக ஈட்டி, அதில் எட்டு ரூபாயை செலவழித்தால் இரண்டு ரூபாய் லாபம் கிடைக்கும். இந்த லாபத்தை மூன்று ரூபாயாக உயர்த்த விரும்பினால், ஒன்று நாம் வருமானத்தில் 1 ரூபாயை அதிகரிக்க வேண்டும். அல்லது செலவில் ஒரு ரூபாயை குறைக்க வேண்டும். சரிதானே?

வருமானத்தை அதிகரிப்பது என்பது இன்றைய போட்டி உலகில் வாடிக்கையாளர்களின் கையில் இருக்கிறது. ஆனால், செலவினங்கள் நம் கட்டுப்பாட்டில் இருப்பவை. அதனைக் குறைப்பது ஓரளவு சாத்தியமே



# டென்சனா.. கணவன் மனைவி பிரச்னையா.. வொர்க் பிரஷரா...

# மனமே ஒரு மந்திரம் அதை கையாள்வது ஒரு தந்திரம்

அறிந்தும் அறியாமலும், புரிந்தும் புரியாமலும் நம்மை இயக்கும் 'மனம்' விசித்திரமானது என்றே சொல்லாம். மன ஆரோக்கியம் என்பது மனிதர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வின் ஒருங்கிணைந்த அங்கம். நாம் அன்றாடம் வெளிப்படுத்தும் உணர்ச்சி, கோபம், சிறப்பு ஆகியவை உளவியல் செயல்பாட்டை உள்ளடக்கியது என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்..? நம்மை அறியாமல் உளவியல் ரீதியாக நாம் பாதிக்கப்படுகிறோம். உடல் ஆரோக்கியம் நபருக்கு நபர் மாறுபடுவது போலவே, மன ஆரோக்கியமும் மாறுபடும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனோ, அதனைச் செய்யத் தவறிவிடுகிறோம். அதே சமயம், ஒவ்வொருவரின் அனுபவங்களும் தனித்துவமானது என்பதை ஒப்புக்கொள்வது அவசியம் ஆகும்.

மனச்சிதைவு அல்லது மனநல கோளாறு காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு வழிகளில் கவலை, மனச்சோர்வு ஆகியவற்றை வெளிப்படுத்துவார்கள். நம்மில் பலருக்கும் இந்த குறைபாடுகள் இருக்கும். ஆனால், பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் விட்டிருப்போம் அல்லது தெரிந்தும் அலட்சியமாக இருப்போம். இது தவறு என்கிறார்.,கே. ஜி மருத்துவமனையின் தலைவர் டாக்டர் ஜி பக்தவத்சலம். குழந்தைகளின் மன நலனை எவ்வாறு கையாள வேண்டும்? உளவியல் பிரச்னைகளை எவ்வாறு மருத்துவ ரீதியாக அணுக வேண்டும்? என்பது குறித்து விரிவான விளக்கங்களை நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார்.

கே. ஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் ஆயிரத்தில் 20 சதவீதம் பேர் மனம் சார்ந்த கோளாறுகளால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக இங்கு வருகின்றனர். மனநலம் என்பது ஒரு நபரின் உணர்ச்சி, உளவியல் மற்றும் சமூக நல்வாழ்வைக் குறிப்பது மட்டுமல்லாமல் மன அழுத்தத்தை நிர்வகித்தல், மற்றவர்களுடன் தொடர்புகொள்வது மற்றும் தேர்வுகள் செய்யும் திறன் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். மனநல பிரச்னைகள் எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் நடத்தையைப் பாதிக்கலாம். மேலும், மன அழுத்தத்தைக் கையாள்வதில் தடுமாற்றம், மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதில் நடுக்கம் மற்றும் முடிவுகளை எடுப்பதில் குழப்பம் ஆகியவற்றில் மனநல பாதிப்பு வெளிப்படுகிறது.சரி..இதனை எப்படிக் கையாள்வது..?இதற்கான தீர்வுதான் என்ன..? என்கின்ற கேள்வி எழும்போது எவ்வித தயக்கமுமின்றி மனநல மருத்துவரைச் சென்று ஆலோசியுங்கள். குறிப்பாக, கே.ஜி மருத்துவமனை போன்று அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கிய மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்களிடம் செல்லுங்கள்.

### மனம் அது செம்மையாக வேண்டும்

மனநலப் பராமரிப்பில் மனநல மருத்துவர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். மனநிலைக் கோளாறுகள், கவலைக் கோளாறுகள், மனநோய்க் கோளாறுகள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பல்வேறு மனநல நிலைமைகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பவர்கள். மனநல மருத்துவர்கள் பெரும்பாலும் மருந்துகள், உளவியல் சிகிச்சை மற்றும் பிற சிகிச்சை உள்ளிட்ட அணுகுமுறைகளின் கலவையைப் பயன்படுத்துகின்றனர். மேலும், தனிநபர்கள் தங்கள் மன ஆரோக்கியத்தை நிர்வகிக்க உதவுகிறார்கள். அவர்கள் தங்கள் நோயாளிகளுக்கு விரிவான கவனிப்பை வழங்க மற்ற சுகாதார நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றுகின்றனர்.

மனநல கோளாறுகளின் தீவிர அறிகுறிகள் குறிப்பிட்ட நிலையைப் பொறுத்துப் பரவலாக மாறுபடும். இருப்பினும், கடுமையான மனநலப் பிரச்னையைக் குறிக்கும் சில பொதுவான அறிகுறிகள் இருக்கின்றன. முன்னதாக, இறைவன் நமக்கு அருளிய பரிசு இந்த அற்புதமான வாழ்க்கை. அதனைச் சந்தோசமாகவும், உற்சாகமாகவும் எடுத்துக் கொண்டு வாழவேண்டும். அன்பு;சந்தோசம்;அமைதி இவை மனிதவாழ்வில் இன்றியமையாத அம்சங்கள் ஆகும். நல்ல மனசு இருந்தால் நல்ல வாழ்க்கை இருக்கும்.

நல்ல வாழ்க்கைக்கு நல்ல மனசு தேவை. உடம்பில் இருக்கும் இருதயம், சிறுநீரகங்கள், மூளை, நுரையீரல், கல்லீரல் ஆகிய ஐந்தும் முக்கிய உறுப்புகள் ஆகும். மேலும், ஆறாவதாக ரத்தம் முக்கியத்துவம் பெறுகிறது. உடலில் எப்படி அனைத்து உறுப்புகளின் இயக்கங்களும் சீராக இருக்க வேண்டுமோ அதுபோலவே மனமும் சீராக இருக்க வேண்டும். “மனம் அது செம்மையானால் மந்திரம் ஜெபிக்கத் தேவையில்லை” என்பது போல் மனநலம் வாழ்வியல் சுழலில் நம்மை ஆட்கொள்கிறது.

மூளையில் புத்தி இருக்கிறது என்பது தெரியும்; மனம் எங்கே இருக்கிறது என்று தெரியுமா? நம் உடல் முழுவதும் பரவி இருக்கிறது மனம். நம் உடம்பின் நிலையை ஆளுவதும், ஆட்டி வைப்பதும் மனம் தான். இப்படியாக, மன நலம் பேணுவது மிகவும் அவசியம். அதற்கு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். பிறரையும் மகிழ்வடையச் செய்ய வேண்டும். ஆகவே, தான் எங்கள் மருத்துவமனையில் மன நலம் துறைக்கு “மகிழ்ச்சித் துறை” என்று பெயரிட்டுள்ளோம். மேலும், அதன் பெயருக்கு ஏற்றவாறு எங்களிடம் வரும் நோயாளிகள் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் மாற்றுவதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்.

> **“ எங்கள் மருத்துவமனையில் மன நலம் துறைக்கு "மகிழ்ச்சித் துறை" என்று பெயரிட்டுள்ளோம். மேலும், அதன் பெயருக்கு ஏற்றவாறு எங்களிடம் வரும் நோயாளிகள் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் மாற்றுவதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்.**



**- டாக்டர் ஜி.பக்தவத்சலம்,**
தலைவர், கே.ஜி மருத்துவமனை

## உணர்வுபூர்வமாக இணைக்கும் மனநலம்




டாக்டர் பொன்னி முரளிதரன், தலைமை மனநல மருத்துவர், கே.ஜி மருத்துவமனை மனநல மருத்துவர்கள் மனநல கோளாறுகளை கண்டறிந்து சிகிச்சை அளிப்பதில் நிபுணத்துவம் பெற்றவர்கள். மனநல கோளாறுகள் எண்ணங்கள், உணர்ச்சிகள் மற்றும் நடத்தையை பாதிக்கும் பலவிதமான நிலைமைகளை உள்ளடக்கும் என்கிறார் கே.ஜி மருத்துவமனையின் தலைமை மனநல மருத்துவர் டாக்டர் பொன்னி முரளிதரன்.

### மனநிலையில் மாற்றமா? அதன் அறிகுறிகள் என்ன?

சோகம், நம்பிக்கையின்மை அல்லது தீவிர மனநிலை மாற்றங்கள் ஆகியவற்றின் தொடர்ச்சியான உணர்வுகள் மனநல சிதைவின் அறிகுறி ஆகும். அதோடு, தினசரி செயல்பாட்டில் குறுக்கிடும் அதிகப்படியான கவலை, பயம் அல்லது பதட்டமும் மனநல நோயின் அறிகுறிகள் தான்.

இதனை ஆங்கிலத்தில் **Intense Anxiety** என்கிறோம். இதைத்தொடர்ந்து, தூக்கமின்மை அல்லது அதிக தூக்கம் போன்ற தூக்கத்தில் குறிப்பிடத்தக்க இடையூறுகள், சமூக நடவடிக்கைகளைத் தவிர்ப்பது, தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்வது அல்லது மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதில் சிரமத்தை அனுபவிப்பது, நடத்தை, ஆளுமை அல்லது அன்றாட நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள், கவனம் செலுத்துவதில் சிரமம், முடிவுகளை எடுப்பது அல்லது சிதைந்த சிந்தனையை அனுபவிப்பது, உண்மையல்லாத விஷயங்களை உணர்ந்துகொள்வது அல்லது தவறான நம்பிக்கைகளை வைத்திருப்பது, சுயதீங்கு அல்லது தற்கொலை எண்ணங்கள் போன்ற அறிகுறிகள் இருந்தால் தயக்கம் கொள்ளாமல் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுங்கள்.

மேலும், இத்தகைய அறிகுறிகளை அலட்சியப் போக்கில் விட்டுவிடாமல் கவனத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவர் தீவிர மனநல அறிகுறிகளை அனுபவித்தால், சுகாதார வழங்குநர், சிகிச்சையாளர் அல்லது ஆலோசகரின் உதவியை நாடுவது அவசியம் என்பதை மீண்டும் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.



### மருத்துவர்கள் குறிப்பிடும் பொதுவான மனநலக் கோளாறுகள் எவை?

மனச்சோர்வு **(Depression):** சோகத்தின் தொடர்ச்சியான உணர்வுகள் மற்றும் ஆர்வம் அல்லது மகிழ்ச்சி இழப்பு.

கவலைக் கோளாறுகள் **(Anxiety Disorders):** அதிகப்படியான கவலை, பயம் அல்லது அமைதியின்மை.

ஸ்கிசோஃப்ரினியா **(Schizophrenia):** சிதைந்த சிந்தனை மற்றும் உணர்தல் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் ஒரு வகை தீவிரமான மனநல கோளாறு.

பைபோலர் டிஸ்ஆடர் **(Bipolar Disorder):** பித்து பிடித்தல் என்று சொல்லக் கூடிய உணர்ச்சிவசப்பட்ட மனநிலை மற்றும் மனச்சோர்வு.

அப்செஸிவ்கம்பல்சிவ் கோளாறு **(Obsessive Compulsive Disorder):** தொடர்ச்சியான, தேவையற்ற எண்ணங்கள், ஆவேசப்படுவது மற்றும் ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்வது.


மனஉளைச்சல் சீர்கேடு **(Post-Traumatic Stress Disorder):** ஒரு அதிர்ச்சிகரமான சம்பவத்திற்குப் பிறகு நிகழும் மனஉளைச்சல் அல்லது மறதி. இந்த வகை குறைப்பாடு ஃப்ளாஷ்பேக்குகள், கனவுகள் மற்றும் கடுமையான கவலைகளுக்கு வழிவகுக்கிறது.

கவனக் குறைபாடு **(Attention Deficit Hyperactive Disorder):** மனக்கிளர்ச்சி, அதிவேகத்தன்மை மற்றும் கவனத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் சிரமம்.

நல்ல மன ஆரோக்கியம் நல்வாழ்வின் உணர்விற்கு பங்களிக்கிறது, தனிநபர்கள் வாழ்க்கையை அனுபவிக்கவும், மன அழுத்தத்தை சமாளிக்கவும், நேர்மறையான உறவுகளை பராமரிக்கவும் அனுமதிக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மன ஆரோக்கியமும் உடல் ஆரோக்கியமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. மன நலம் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கிறது. ஒரு ஆரோக்கியமான மனம், வேலை, பள்ளி அல்லது தனிப்பட்ட நோக்கங்களில் அன்றாட நடவடிக்கைகளில் அறிவாற்றல் செயல்பாடுகள், செறிவு மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துகிறது.

அதோடு, வலுவான மன ஆரோக்கியம் சிறந்த உறவுகள், பயனுள்ள தொடர்பு மற்றும் மற்றவர்களுடன் உணர்வுபூர்வமாக இணைக்கும் திறனை வளர்க்கிறது என்பதை உணர்ந்து கொண்டு மனநலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.



> **“ உண்மையல்லாத விஷயங்களை உணர்ந்துகொள்வது அல்லது தவறான நம்பிக்கைகளை வைத்திருப்பது, சுயதீங்கு அல்லது தற்கொலை எண்ணங்கள் போன்ற அறிகுறிகள் இருந்தால் தயக்கம் கொள்ளாமல் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுங்கள்.**

**- டாக்டர் ஜி.பக்தவத்சலம்,**
தலைவர், கே.ஜி மருத்துவமனை



# இஸ்ரேல் ஹமாஸ் போர் பேரழிவு;

### குழந்தைகள் எங்கும் செல்ல முடியாத நிலை

இஸ்ரேல் ஹமாஸ் இடையிலான தற்காலிக போர்நிறுத்தம் முடிவுக்கு வந்தது. மீண்டும் இரு நாடுகளுக்கு இடையில் டிசம்பர் 1ஆம் தேதி முதல் போர் தொடங்கி நடந்து வருகிறது. கடந்த மாதம் அக்டோபர் 7 ஆம் தேதி இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுதக்குழுக்கள் பயங்கரவாத தாக்குதலை நடத்தினர். இதில் 1,200க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இதனையடுத்து இஸ்ரேல் ஹமாஸ் போர் மூண்டது. காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய போரில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

போர் நிறுத்தத்திற்கு பிறகு மீண்டும் தொடங்கிய போரில் சுமார் 700க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. வடக்கு காசா பகுதியில் சண்டை நடந்து வருகிறது. ஹமாஸ் போராளிகள் பதுங்கியிருப்பதாக நம்பப்படும் தெற்கு நகரமான கான் யூனிஸில் இருந்து வெளியேறுமாறு அப்பகுதி குடியிருப்பாளர்களுக்கு இஸ்ரேல் ராணுவம் உத்தரவிட்டுள்ளது. அங்கு, இரு தரப்பினர்களுக்கு இடையில் தீவிரமான தாக்குதல்கள் நடந்து வருகின்றன. அதேசமயம் காஸாவிலிருந்து தெற்கு இஸ்ரேலுக்குள் ராக்கெட்டுகள் ஏவப்பட்டன.

இஸ்ரேல் ஹமாஸ் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்கா, கத்தார், எகிப்து உள்ளிட்ட நாடுகள் முயற்சி செய்து வருகின்றன. நடந்து வரும் போர் காரணமாக சுமார் 2.3 மில்லியன் கொண்ட மக்கள் தொகையில் முக்கால்வாசிக்கு மேலான மக்கள் அண்டை நாடுகளுக்கு இடம் பெயர்ந்துவிட்டனர்.மேலும் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் இடிபாடுகளில் சிக்கியுள்ளதாகவும், 41,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் நம்பப்படுகிறது. இஸ்ரேல் ஹமாஸ் போரால் இரு நாட்டினரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

பெற்றோர், குழந்தைகள் என உடைமைகளை இழந்து தவித்து வருகின்றனர். எங்கு திரும்பினாலும் அழு குரல்கள் கேட்கிறது. மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. மக்களின் கண்ணீர்க் கிடையில் நடக்கும் 21ம் நூற்றாண்டின் கொடிய போராக பார்க்கப்படுகிறது. காசா மீதான இஸ்ரேலிய தாக்குதலுக்கு மத்தியில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் எங்கும் செல்ல முடியாத நிலை உருவாக்கியுள்ளது. இஸ்ரேல் ஹமாஸ் குழந்தைகளின் நிலையைப் பார்க்கும் போது நம்மை அறியாமல் நெஞ்சம் பதைபதைத்து சுக்கு நூறாக உடைகிறது. எப்போது முடிவுக்கு வரும் இந்த கொடிய போர்.?

## ஸ்ரீ ராமகிருஷ்ணா தொழில்நுட்ப கல்லூரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

கோவையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தொழில்நுட்பக்கல்வியை சீரான விதத்தில் போதித்து வரும் ராமகிருஷ்ணா தொழில்நுட்பக் கல்லூரியில் ரியல்வோர்க்ஸ் ஸ்டுடியோ இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.

ரியல்வோர்க்ஸ் ஸ்டுடியோ 3D அசைவூட்டல் மென்பொருள் தொழில்நுட்பத்தில் ஒரு முன்னோடி நிறுவனம் ஆகும். கோவையை சார்ந்த இந்த நிறுவனம் லியோ, விக்ரம், இரவின் நிழல், மாநகரம், என பல திரைப்படங்களில் 3D தொழில்நுட்பத்தை இயக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஸ்ரீ ராமகிருஷ்ணா தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு 3D அசைவூட்டல், சிறப்பு விளைவு போன்றவற்றை ரியல்வோர்க்ஸ் ஸ்டுடியோ கற்றுகொடுக்க உள்ளது.

இதற்காக கல்லூரியில் தேவையான வன்போருட்களுடன் ஒரு ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நிகழ்வில் எஸ்என்ஆர் சன்ஸ் அறக்கட்டளை சார்பில் அதன் அறங்காவலர் லக்ஷ்மி நாராயணசுவாமி, ரியல்வோர்க்ஸ் ஸ்டுடியோ சார்பில் அதன் நிர்வாக இயக்குநரான சிவபிரசாத் வேலயுதனும் கையொப்பமிட்டனர்.



எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் அறங்காவலர் லக்ஷ்மி நாராயணசுவாமி, ரியல்வோர்க்ஸ் ஸ்டுடியோவின் இயக்குநர் சிவபிரசாத் வேலயுதனும் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட போது.

# அன்று பல கோடிகளை பார்த்தவர் இன்று வறுமையை பார்க்கிறார்

ஒரு முறையேனும் ரேமண்ட் ஆடையை அணிய வேண்டும் என்ற ஆர்வம் சாமானியர்களாகிய நம்மில் பலருக்கும் இருந்திருக்க வாய்ப்பு உண்டு. அதிலும், உயர் தட்டு மக்கள் மட்டுமே அணியும் ஆடையாக ஒரு பிரீமியர் பிராண்ட் ஆக இருக்கும் ரேமண்ட் 80'ஸ் 90'ஸ் கிட்ஸ்களின் கனவு ஆடை என்றே சொல்லாம். மும்பையில் உள்ள தானே பகுதியில் ஒரு சிறிய அறையில் தனது தந்தையுடன் சேர்ந்து ரேமண்ட் நிறுவனத்தைத் தொடங்கினார் விஜய்பத் சிங்கனியா. இதே காலகட்டத்தில் தான் ரிலையன்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் திருபாய் அம்பானியும் தொழில் தொடங்கினார். விஜய்பத் சிங்கனியாவின் கடின உழைப்பு ரேமண்ட்






நிறுவனத்தை உச்சத்துக்கு கொண்டு சென்றது. ரேமண்ட் என்று சொன்னால் நாட்டில் கடைக் கோடியில் இருப்பவரும் அறியும்படி மிகவும் பிரபலம் ஆனது. ஒரு கட்டத்தில் முகேஷ் அம்பானிக்கே டஃப் கொடுக்கும் அளவுக்கு விஜய்பத் சிங்கனியாவின் சொத்து மதிப்பு நிகராக இருந்தது. சொல்லப் போனால் அவரைவிடப் பணக்காரராக இருந்தார். ரேமண்ட் நிறுவனத்தை உலகம் முழுவதும் கொண்டு செல்ல வேண்டும் என்ற விஜய்பத் சிங்கனியாவின் கனவு பலித்தது.ரேமண்ட் ஆடைக்கு தனி மரியாதையை உண்டாக்கி உலகின் மிகப்பெரிய ஜவுளி நிறுவனமாக ரேமண்டை உன்னத நிலைக்குக் கொண்டு சென்றார்.

உச்சம் தொடும் மனிதர்கள் வாழ்வில் எதிர்பாராத சரிவுகளை சந்திக்கதான் நேரிடும் என்பதற்கு விஜய்பத் சிங்கனியாவும் விலக்கில்லை. விதி யாரை விட்டது. சொத்து பிரச்னை விஜய்பத் சிங்கனியா குடும்பத்தில் தலை தூக்கியது. எனவே, தனது சொத்துக்களை மூத்த மகன் மதுபத், இரண்டாவது மகன் கவுதம் ஆகிய இருவருக்கும் பிரித்துக் கொடுத்து விட்டார். அதோடு, ரேமண்ட் நிறுவனத்தின் அனைத்து பொறுப்புகளையும் இரண்டாவது மகனிடம் ஒப்படைத்து விட்டார். தனக்கென்று எதையும் எடுத்துக் கொள்ளவில்லை.

இந்நிலையில், மும்பையில் இரண்டாவது விலைமதிப்புள்ள ரூ.6000ம் கோடி மதிப்புள்ள ஜே.கே ஹவுஸ் என்ற வீட்டில் குடும்பத்தினருடன் வாழ்ந்து வந்தார். தனது இறப்பு இந்த வீட்டில் தான் நிகழ வேண்டும் என்பதுதான் அவரின் ஆசையாக இருந்தது. ஆனால்,குடும்ப சூழல், மகனுடன் ஏற்பட்ட பிரச்னை காரணமாக அந்த வீட்டை விட்டு வெளியேறி வாடகைக்கு ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்து வருகிறார். அன்று மிகப்பெரிய பணக்காரர்;இன்று வறுமையின் வழும்பில் தவிக்கும் மனிதர். காலம் எவ்வளவு கொட்டியது. வாழ்க்கையை ஒரு ஏமாற்றப் புன்னகையுடனே எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்ற கூற்று விஜய்பத் சிங்கனியாவுக்கு பொருந்திப்போனது.

# உலகில் மாற்றங்களை ஏற்படுத்தும் தகவல் தொழில்நுட்பம்

நேரு தொழில்நுட்ப கல்லூரி, மத்திய கல்வி அமைச்சகம் புதுமைப்படைப்பு பிரிவு மற்றும் அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சில் இணைந்து மண்டல அளவிலான ஐஐசி கல்வி நிறுவனங்களின் புதுமை படைப்பு கவுன்சில் சந்திப்பு நிகழ்வை நடத்தின.

இந்நிகழ்ச்சியை, மத்திய அரசின் அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில், கல்வி அமைச்சகத்தின் உதவி புதுமைப்படைப்பு இயக்குநர் தீப்பன் சஹ, இப்போபே இணை நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி மோகன் ஆகியோர் துவக்கி வைத்தனர். நேரு கல்வி குழுமங்களின் தலைமை செயல் அதிகாரி மற்றும் செயலாளர் டாக்டர் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். தலைமை விருந்தினராக அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சில் துணை தலைவர் டாக்டர் அபாய் ஜெரி வீடியோ கான்பரன்ஸ் மூலம் பங்கேற்றார்.

விழாவில் இப்போபே இணைநிறுவனர் மோகன் பேசுகையில், தற்போதுள்ள நிலையில் ஸ்டார்ட் அப் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. தகவல்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பங்கள் உலகில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. உலகமயமாக்கல், அதிக போட்டியான நிலையை உருவாக்கியுள்ளது, என்றார். பல்வேறு பிரிவுகளை சார்ந்த 71க்கும் மேற்பட்ட நடுவர்கள் பங்கேற்று கலந்துரையாடல்கள் நிகழ்ந்தன. தொழிற்சாலைகள், கல்விநிறுவனங்கள், அரசுதுறைகள் போன்றவைகளில் உள்ள மாற்றங்கள், புதுமை படைப்புகள் மூலம் விவாதிக்கப்பட்டன.

ஐஐசி மண்டல சந்திப்பில் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து 90 க்கும் மேற்பட்ட புதுமைப்படைப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன. 5 படைப்புகள் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான




நிகழ்ச்சியை குத்து விளக்கு ஏற்றி தொடங்கிவைக்கும் சிறப்பு விருந்தினர். உடன், நேரு கல்வி குழுமங்களின் தலைமை செயல் அதிகாரி மற்றும் செயலாளர் டாக்டர் கிருஷ்ணகுமார் உள்ளிட்ட பலர்.

தீர்வுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டன. போட்டிகள், கல்வி நிறுவனங்களின் புதுமைபடைப்புகளை திரையிடப்பட்டன. மேலும் பல்வேறு போட்டிகள் உட்பட பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

மேலும், நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் எம்.சிவராஜா வரவேற்றார். நேரு கல்வி நிறுவனங்களின் வேலைவாய்ப்புகள் குறித்து சிஆர்ஜ துறைத்தலைவர் எம்.எஸ் இர்பான் அகமது விளக்கினார். நிகழ்ச்சியை புதுமைப்படைப்பு பிரிவு மேலாளர் அலோசியஸ் பிரிட்டோ ஒருங்கிணைத்தார். ஐஐசி ஒருங்கிணைப்பாளர் சிந்துஜா நன்றி தெரிவித்தார்.

இந்த ஐஐசி மண்டல சந்திப்பு நிகழச்சியில் 200 300 ஐஐசி கல்வி சாரா நிறுவனங்கள், 50 100க்கும் மேற்பட்ட கல்வி சாரா நிறுவனங்கள், 20க்கும் மேற்பட்ட மண்டல சுழல் அமைப்புகளும், 1,040 பேர் இதில் பங்கேற்றனர். 30 க்கும் மேற்பட்ட குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு வட்டமேசை மாநாட்டில் பங்கேற்றனர். 40 ஆலோசகர்கள் புதிய சிந்தனைகளையும் ஸ்டார்ட் அப் முயற்சிகளையும் குறித்து முடிவுகளை பேசினார்கள்.

## நொய்யல் ஆற்றில் வெள்ளப்பெருக்கு



கோவையில் சுற்று வட்டாரப் பகுதிகளில் விடிய விடிய பெய்த கன மழையினால் நொய்யல் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு புத்தம் புது மழை வெள்ளம் புட்டு விக்கி அணைக்கட்டை கடந்து செந்நிறத்தில் பாய்ந்து ஓடுகிறது.

## திறனை வளர்த்து கொள்ள ஒரு அறிய வாய்ப்பு

திறன் தகுதியை வளர்த்துக் கொள்ள இளைஞர்களுக்கு ஒரு அறிய வாய்ப்பாக எஸ் என் ஆர் சன்ஸ் அறக்கட்டளை கீழே இயங்கும் கோவை வட்டமலைப்பாளையத்தில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா அட்வான்ஸ் ட்ரெய்னிங் இன்ஸ்டிடியூட் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் இணைந்து மூன்று மாதம் **MIG/ MAG/ GMAW** வெல்டிங் பயிற்சியை வருகின்ற டிசம்பர் 18 ஆம் தேதி முதல் 100 சதவீதம் எந்தவிதமான கட்டணமும் இல்லாமல் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும் பயிற்சி பெறும் வெளியூர் மாணவர்களுக்கு தங்கும் விடுதி மற்றும் உணவு ஆகிய அனைத்தும் இலவசமாக வழங்கப்படும். உள்ளூர் மாணவர்களுக்கு பயிற்சியின் முடிவில் ரூபாய் 7500 ஊக்கத்தொகையாக வழங்கப்படும். மூன்று மாத பயிற்சிக்கு பிறகு முன்னணி நிறுவனங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதால் 100 சதவீதம் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும் விபரங்களுக்கு:
**9600422851 / 7373728566**
**www.srati.in**

# பெண்கள் அறிந்திருக்க வேண்டிய சட்ட உரிமைகள்

உரிமை என்பது உறுதி செய்யப்பட்ட சுதந்திரமாகும். ஆனால் பெரும்பாலானோருக்கு தாங்கள் என்னென்ன உரிமைகளை பெற்றிருக்கிறோம் என்பது கூட தெரிவதில்லை. அதிலும் பெரும்பாலான பெண்கள் அவர்களுடைய உரிமையினை நிலைநாட்டுவதில்லை. அப்படியாக இந்திய சட்டத்தில் இருக்கும் சில உரிமைகளை பற்றி பார்ப்போம்.

**சம ஊதியத்திற்கான உரிமை**

ஊதிய சட்டத்தின்படி, வேலையில் சம ஊதியம் பெறப் பெண்களுக்கு உரிமை உண்டு. சம்பளம் அல்லது ஊதியம் ஆகியவற்றின் அடிப்படையில் பாலின அடிப்படையில் பாகுபாடு காட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது.




**இரவில் கைது செய்யக்கூடாது என்பது உரிமை**

விதிவிலக்கான சூழ்நிலையில் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டின் உத்தரவு இல்லாமல், சூரிய அஸ்தமனத்திற்குப் பின் மற்றும் சூரிய உதயத்திற்கு முன் பெண்களை கைது செய்ய முடியாது.



**பணியிட துன்புறுத்தலுக்கு எதிரான உரிமை**

பணியிடத்தில் பெண் களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் சட்டமானது பெண்கள் தங்கள் பணியிடத்தில் ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிராக புகார் அளிக்க உரிமை வழங்குகிறது.



**குடும்ப வன்முறைக்கு எதிரான உரிமை**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 498வது பிரிவு, வார்த்தைகளால் துன்புறுத்தல், பொருளாதாரம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட குடும்ப வன்முறைகளிலிருந்து பெண்களைப் இந்த சட்டம் பாதுகாக்கிறது.

**இலவச சட்ட உதவிக்கான உரிமை**

பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சட்ட சேவைகள், இந்த சட்டத்தின் கீழ் இலவச சட்ட உதவி பெற உரிமை உண்டு.



# KMCH: 6 Years at the Top



*- Dr.Nalla G Palaniswami*
*Chairman ,KMCH*

Coimbatore's very own Kovai Medical Center and Hospital (KMCH) has clinched the prestigious title of the 1st Best Multi-speciality Hospital in the city, an honor bestowed upon it for an impressive six years in a row.

The recognition comes from The Week Magazine's Hansa Research Survey 2023, where KMCH's stellar performance across key factors like overall reputation, doctor competency, infrastructure, research and innovation, and patient care secured its top-ranking position. This achievement underscores KMCH's steadfast dedication to providing outstanding healthcare to the local community.



# TVS Apache RTR 310 Breaks Cover

TVS Motor Company recently unveiled the TVS Apache RTR 310 in Coimbatore. The flagship in the iconic Apache lineup promises a thrilling two-wheeled experience with its powerful performance, agility, and stylish design. The motorcycle introduces innovative features in design, engine layout, and heat management, focusing on rider engagement, safety, and comfort.

The TVS Apache RTR 310 offers a range of 12 freestyler accessories, including knuckle guards, visors, panniers, and a top box kit. Additionally, it provides 14 safety gears and lifestyle merchandise for riders to choose from. The bike comes with 24x7 roadside assistance and hassle-free servicing through annual maintenance contracts.



VimalSumbly, Head Business - Premium, TVS Motor Company, expressed excitement at the launch, stating, "The TVS Apache RTR 310 marks the beginning of a new era in Freestyle Performance Motorcycling. It inherits a 40-year racing pedigree and is built on our Track to Road philosophy. This flagship Apache, with its cyborg-inspired streetfighter design, all-range torque, and track-tuned agility, sets new benchmarks in technology, enhancing the thrill and fun for the new age riders - a true Power to Play for the Freestyler.

The TVS Apache RTR series has already made its mark as a formidable force in the naked format within the premium lifestyle segment. Recently, the TVS Apache series achieved a milestone of 5 million global sales, establishing itself as the fastest-growing premium motorcycle brand in the segment."

Available in three standard SKUs and three Built To Order (BTO) customizations, the TVS Apache RTR 310 comes with an attractive pricing structure:

Arsenal Black (w/o Quickshifter): Rs. 2,42,990, Arsenal Black: Rs. 2,57,990, Fury Yellow: Rs. 2,63,990

Built To Order (BTO) customizations include Dynamic Kit (Rs. 10,000), Dynamic Pro Kit (Rs. 22,000), and Sepang Blue (Rs. 18,000).

# PSG Ranks 2nd in Healthcare



*- L Gopalakrishnan*
*Managing Trustee*
*PSG & SONS' Charities*

PSG Super-Speciality Hospitals has secured the 2nd Best Multi-Speciality Hospital title in Coimbatore, as per The Week Magazine's Hansa Research Survey 2023. Recognized for unwavering commitment to healthcare excellence, PSG excelled in patient satisfaction, clinical prowess, technology integration, and robust infrastructure.

With cutting-edge facilities, surgical robots, and a renowned team of specialists, PSG ensures expert care across diverse medical specialties. The hospital's holistic, patient-centered approach, emphasizing preventive care and rehabilitation, cements its position as a healthcare leader in the region.




# NGP iTech's Conference on Sustainability

An International Conference on "Multidisciplinary Perspective in Engineering, Business Management, Social Sciences, and Technology Towards Sustainable Living - 2023," was organized by Dr. N.G.P. Institute of Technology, Coimbatore, and Lincoln University College, Malaysia. The event, hosted at Lincoln University Malaysia, saw participation from 60 faculty members presenting in person and 15 researchers presenting online.

Krishnamoorthi, Professor & Head -Department of Information Technology, Dr.N.G.P. Institute of Technology welcomed the attendees, and Amiya Bhaumik, President of Lincoln University College, emphasized the importance of addressing sustainability issues. S. U. Prabha, Principal of Dr.N.G.P. Institute of Technology, highlighted the significance of a multidisciplinary approach in promoting sustainable living practices.

Abhijit Ghosh, Dean of Faculty of Business & Accountancy, Lincoln University College, delivered the keynote address, providing insights into integrating engineering, business management, social sciences, and technology for sustainable living.

The conference concluded with Franklin John, Professor & Head- Management Studies, expressing gratitude and proposing a vote of thanks to all participants, speakers, and organizers. The event served as a successful platform for interdisciplinary dialogue and collaboration, working towards a more sustainable and responsible future.

## AIMS Lead Discussion on AICTE's BBA Inclusion Initiative



*Uday Salunkh, Past President of AIMS and Nandagopal, Member of the All India Management Studies Board (AICTE) and Immediate Past President involved in the discussion on the 'Draft of AICTE Approval Process Handbook 2024-2025'.*

All India Management Studies (AIMS) and Jansons School of Business jointly hosted a discussion on the 'Draft of AICTE Approval Process Handbook 2024-2025,' with a special focus on the proposed inclusion of the BBA / BCA programs under AICTE's purview.

The event took place at Jansons School of Business on 8th December 2023 witnessed the participation of esteemed speakers, including Uday Salunkh, Past President of AIMS at Welingkar Institute of Management, and Nandagopal, Member of the All India Management Studies Board (AICTE) and Immediate Past President, sharing their insights. The session, moderated by AGV Narayanan, Chairman of AIMS Tamil Nadu Chapter and Director at Jansons School of Business, provided a platform for meaningful discourse.

## Kutti Roadies '23: Cycling for a Cause

Kutti Roadies '23 is a cycling event organized for children by Coimbatore United Round Table 186, a young men's organization formed in 2008. The event took place on December 3rd at Codissia Grounds. Comprising businessmen and professionals, their goal is to conduct community service activities across India. The first edition took place in 2019, and the second edition in 2023 serves as a fundraiser for community service projects.

Round Table India has successfully built 8,665 classrooms in 3,616 schools nationwide, with a total cost exceeding 437 crores. The first edition of Kutti Roadies raised Rs 2,00,000, and the second edition aims for a target of Rs 10,00,000. Approximately 1,000 kids have registered for Kutti Roadies '23.

The Chief Guest for the event was G. Chandeesh, DCP, North Coimbatore. Other dignitaries present included Tr. Karthik Manikandan, Chairman, Tr. Satish Krishna, Secretary, and Bluewin Jose, Treasurer of Coimbatore United Round Table 186.

## ASBM Fosters Social Responsibility



*ASBM Students' practical CSR learning activity at SSS Charitable Trust*

MBA students engaged in a practical CSR learning activity at SSS Charitable Trust, Coimbatore. The initiative allowed them to apply their curriculum-based CSR knowledge to real-world situations.

ASBM, dedicated to molding socially responsible leaders, regularly undertakes such impactful events. The activity, supported by SSS Management, emphasized understanding and internalizing the importance of social services for the community.

Sundarapandiyan Natarajan, ASBM Director, accompanied students, enriching the experience. Notably, the Trust relies on Founder's resources, never seeking external donations, and extends services in healthcare, education, and more.

# "We're in no way inferior to Westerners"

***-Srinivasa V Giri**, Managing Partner, Sri Sai Agro Process & Export LLC*



*Chief Guest Srinivasa V Giri discussed with the students about the transformation in education*




*A. Valarmathi, Director of VIMS, Chief Guest Srinivasa V Giri, along with the Esteemed Dignitaries and the newly elected office bearers of the Students' Association launched the 'VIMS Venture', an initiative to nurture students' entrepreneurial talents.*

On 30th October 2023, Vivekananda Institute of Management Studies (VIMS) hosted the inauguration of its Students' Association, 'Cambista,' within the college premises. A. Valarmathi, Director of VIMS delivered the Presidential address. Srinivasa V Giri, Managing Partner of Sri Sai Agro Process & Export LLC, graced the occasion as the Chief Guest. The event witnessed the installation of new office bearers for the academic year 2023-24.

During the ceremony, the Chief Guest, Srinivasa V Giri, underscored the significance of teamwork, expressing that being part of a team enables one to achieve anything.

He shared his life experiences at a B-school that transformed him into a better professional and also suggested his success mantra of social commitment and humanitarian reciprocal behaviour to students, which fueled his progress. Distinguishing the learning processes of different eras, he highlighted the transformation in education.

He also reflected on the treatment of Indians as inferior by Western countries in the 90s, emphasizing India's recent success with the Chandrayaan-3 mission as proof of parity with the Western world by saying, "we're no way inferior to westerners".

Additionally, Uma Maheswari, Associate Professor gave an introduction to the VIMS venture aligning with the institution's motto to nurture students' entrepreneurial talents even at the college level.

Notably, 80 students have registered in the Entrepreneurship Development Cell, showcasing a promising future for budding entrepreneurs at VIMS.

Durai, Senior Assistant Professor, facilitated the introduction of Cambista Committee members for various clubs such as Extension Relationship Club, Cultural Club, Service Club, Consultancy Club Human Resource, Finance, etc.

## Star Health Insurance settles 131 crore claims in Cbe

Star Health and Allied Insurance recently disbursed over Rs.131 crore in claims settlements in Coimbatore from April to September 2023. Notably, Rs.127 crore went to network hospitals, and approximately Rs.4 crore to non-network hospitals. The company fulfilled its commitment to customers by settling all cashless claims within 2 hours and reimbursement claims within 7 days.

Surgical treatments constituted over Rs.83 crore, medical treatments Rs.48 crore, with Rs.53 crore for women and Rs.78 crore for men. Star Health identified a challenge in insurance awareness, emphasizing the need for policyholders' understanding. Improved awareness offers benefits like telemedicine, wellness programs, and free health check-ups, accessible through the Star Health App.

**For Advertisement**

**84898 12341, 84895 12341**

**covaimailads@gmail.com, report2tcm@gmail.com**

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

## TNAU Secures Design Patent for Drone Bird Scarer

The Tamil Nadu Agricultural University recently secured a design patent for its Dual Motor Bird Scarer, granted by the Controller General of Patents, Designs, and Trademarks in the Government of India.

In various agro-ecological systems, birds pose a significant threat to crops during sensitive stages, causing economic damage ranging from 25 to 65 percent. Various control methods, including visual deterrents like machans, crows, half kites, dead birds, balloons, reflective paper plates, and reflective tape, are employed. However, birds tend to acclimate to these methods over time.



*TNAU Vice Chancellor V. Geethalakshmi presents Design Patent for Dual Motor Drone Bird Scarer for the Researchers*

To address this, a drone-controlled scarecrow was developed, utilizing technology widely used for spraying and sowing. The drone, mimicking bird flight, emits sound to deter birds and is powered by two motors, controlled remotely. The device, equipped with a sound unit producing random scares, proves to be a simple and effective solution for farmers.

## RC Infra's Smile-School Project



*Rotary Coimbatore Infra and Adhava Smart Power, through their Smile-School Support Project, recently donated an Incinerator Machine to Govt. Hr. Secondary School in Muthugoundanur, Kinathukadavu. The project, valued at Rs.15000, was spearheaded by Rtn Jayaprakash, with contributions from Rtn Nagarajan. The event, organized by Rtn Ramamoorthi, saw the participation of 120 students, benefitting 90 in total.*

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan

# நட்சத்திர ஹோட்டலுக்கு
# ராம்ராஜ் காட்டன் நிறுவனர் வேண்டுகோள்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான விராட் கோலியின் ஒன் 8 கம்யூன் உணவகத்தில் வேட்டி அணிந்து சென்ற நபருக்கு அண்மையில் அனுமதி மறுக்கப்பட்ட விவகாரம் பேசும் பொருளாகியுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் மும்பை ஜுஹு பகுதியில் செயல்படும் ஒன் 8 கம்யூன் உணவகத்துக்கு வேட்டி அணிந்து சென்றபோது, அவரை உள்ளே அனுமதிக்கவில்லை. இதனையடுத்து, வேட்டி, சட்டை அணிந்தபடி அந்த உணவகம் முன்பு




அவர் பேசுவது போன்ற காணொளி ஒன்றை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டார். இந்த சம்பவத்தை அடுத்து பல்வேறு தரப்பில் இருந்தும் கண்டனங்கள் வெளிவந்த வண்ணம் இருந்தன.

இந்நிலையில், ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் நிறுவனர் நாகராஜன் கருத்து தெரிவித்து இருக்கிறார். அவர் கூறியதாவது:

வேட்டி, தமிழர்களின் பாரம்பரியம் மட்டுமல்ல இந்திய கலாசாரத்தை எடுத்துக்காட்டும் அடையாளம். 100 ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற மகாத்மா காந்தி, வெள்ளையர்களுக்கு எதிரான எதிர்ப்பின் அடையாளமாக வேட்டியை தேர்ந்தெடுத்தார். வேட்டியின் முக்கியத்துவத்தை நாம் அறிந்து கொள்ள இந்த ஒரு நிகழ்வு போதும். ஆடைகளில் நவீனத்துவம் வந்ததையடுத்து பாரம்பரிய உடைகள் மீதான முக்கியத்துவங்களை புரிந்து கொள்ள ஏனோ தவறி விடுகிறோம்.

பாரம்பரியம் மிக்க வேட்டி நமது கலாசாரத்தை பிரதிபலிப்பது மட்டுமின்றி, எண்ணற்ற நெசவாளர்களின் வாழ்வாதாரமாகவும் விளங்குகிறது.

எனவே, ஒன் 8 கம்யூன் உணவகம் வேட்டியின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டு நடக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.



**நாகராஜன்,** நிறுவனர்,ராம்ராஜ் காட்டன்

## சுகுணா பள்ளியின் ஆண்டு விழா

சுகுணா ரிப் வி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் ஆண்டு விழா காளப்பட்டி சாலையில் உள்ள சுகுணா ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது.

சுகுணா கல்வி நிலையங்களின் தலைவர் லக்ஷ்மி நாராயணசுவாமி, பள்ளியின் தாளாளர் சுகுணா லட்சுமி நாராயணசாமி ஆகியோர் தலைமை தாங்கினார். அறங்காவலர் ராஜாமணி அம்மாள், நிர்வாக இயக்குனர் அனிஷ்குமார், பள்ளியின் இயக்குனரும், முதல்வருமான ஆண்டனிராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற முதன்மை வன பாதுகாவலர் கந்தசாமி கலந்துகொண்டு சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில் கடந்த கல்வி ஆண்டில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாணவர்களின் சாகச விளையாட்டு போட்டிகள், நாடகங்கள், குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் போன்றவை நடைபெற்றது.

# சிறந்த பொறியாளர்களை உருவாக்கும் கல்லூரி

**- ராமசாமி, செயலர், என்.ஐ.ஏ கல்வி நிறுவனம்**

டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரியின் 20வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

நிகழ்விற்கு என்.ஐ.ஏ கல்வி நிறுவனங்களின் செயலர் ராமசாமி பங்கேற்று உரையாற்றினார். அவர் பேசுகையில், "நம் கல்லூரி ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான சிறந்த பொறியாளர்களை உருவாக்கி, 90 சதவீத மாணவர்களுக்கு தொடர்ச்சியான வேலை வாய்ப்பினை பெற்று கொடுத்து வருகிறது". என்றார்.

இதையடுத்து, கல்லூரியின் முதல்வர் கோவிந்தசாமி, கல்வி மற்றும் ஆராய்ச்சி சிறப்புகள் அடங்கிய சுருக்கமான கல்வி அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேலும், எம்.சி.இ.டி யின் தலைவர் டாக்டர் மாணிக்கம் தலைமை உரையாற்றினார். அவர் பேசுகையில், உலகிலேயே வேகமாக வளரும் பொருளாதாரம் இந்தியாதான்.




மாணவர்களுக்கு பட்டங்களை வழங்குகிறார் சிறப்பு விருந்தினர் ஆனந்தகுமார் மணி. உடன், கல்லூரி தலைவர் மாணிக்கம், செயலர் ராமசாமி, முதல்வர் கோவிந்தசாமி உள்ளிட்டோர்.

இந்தியாவின் கார்ப்பரேட் உலகத்தின் பட்டதாரிகளின் வளர்ச்சிக்கான வளமான களமாக திகழ்கிறது. அவர்களின் திறன் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துமாறு வலியுறுத்தினார். தொழில் மற்றும் குடும்பத்திற்கு இடையே இணக்கமான சமநிலையை பின்பற்ற வேண்டும் என்று கூறினார். விழாவிற்கு சிறப்பு விருந்தினராக ஆனந்தகுமார் மணி, துணைத் தலைவர், பிஎல்எம் – மெக். / எலெக்., கேப்ஜெமினி, பெங்களூரு பங்கேற்று, சிறப்புரையாற்றினார். அவர் பல்வேறு துறைகளில் தற்போதைய வாய்ப்புகளை அங்கீகரிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார் . குறிப்பாக கொரோனாவிற்கு பிறகு அனைத்து துறைகளிலும் வளர்ச்சியைத் தூண்டியது. டிஜிட்டல் முன்னேற்றங்களின் உருமாற்ற தாக்கத்தையும், இந்த வளர்ந்து வரும் நிலப்பரப்பிற்கு பொறியாளர்கள் விரைவாக தகவமைத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான தேவையையும் விரிவாக விளக்கினார். நிகழ்வில் 959 பட்டதாரிகளுக்கு சிறப்பு விருந்தினர் ஆனந்தகுமார் மணி பட்டங்களை வழங்கினார்.

மேலும், படிப்பில் சிறந்து விளங்கிய மாணவர்கள் 12 தங்கப் பதக்கங்கள், ரூ.10,000 ரொக்கப் பரிசு, 11 வெள்ளிப் பதக்கங்கள், 12 வெண்கலப் பதக்கங்களை பெற்றன.

## மின் கட்டண உயர்வு: டிசம்பர் 12ல் மனித சங்கிலி போராட்டம்

கோவையில் தமிழ்நாடு தொழில்துறை மின் நுகர்வோர் கூட்டமைப்பு மற்றும் தொழில் அமைப்புகளின் கூட்டமைப்பு, மறுசுழற்சி ஜவுளி கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் டாட் ஜேம்ஸ் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் பேசுகையில், தமிழகத்தில் உள்ள தொழில் துறை நிறுவனங்களுக்கு மின் கட்டண உயர்வு திரும்பப் பெற வேண்டும் என்பது பிரதான கோரிக்கை, இதில் கடந்த 90 நாட்களாக கிட்டத்தட்ட எட்டு கட்ட போராட்டம் நடத்தினோம். இதில் தமிழக முதலமைச்சர் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் அனைத்து துறை அமைப்புகளுடன் சேர்ந்து நாங்கள் இந்த போராட்டங்களைச் செய்து வருகிறோம் அதற்கு முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை 50% சதவீதத்தை நிறைவேற்றித் தந்தனர். இதில் பீக்கவர் மின் கட்டணமாக ரூபாய் 3500 மின் கட்டணமாக கட்டாயமாக வசூலிக்கப்பட்டு வருகின்றனர். அந்த தொகையைத் தவிர்க்க வேண்டும் என்றும், அதே போன்று சோலார் மின் உற்பத்தியில் இருந்து விலக்கு அளிக்கவும், 3ஏ1 என்ற மின் கட்டண விகிதாச்சாரத்தை முற்றிலும் மாற்றி அமைக்க வேண்டும்.

கிரில் ரோக் வெல்டிங் தொழிலில் 12கிலோ வாட் மின்கட்டணத்திற்கு இரட்டிப்பு கட்டணம் வசூலிக்கின்றனர் இதனை தவிர்க்கவும் வரும் டிசம்பர் 12ஆம்தேதி மனித சங்கிலி போராட்டம் நடத்த உள்ளோம். இந்த 38 மாவட்ட தலை நகரில் மனித சங்கிலி போராட்டம் நடத்த உள்ளோம்.

நாட்டில் 48 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் தரும் தொழில், 1.80லட்சம் தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. இந்த மின் கட்டணத்தில் வருட வருவாயான ரூபாய் 2800 கோடி மின் கட்டணத்தொகையை திரும்ப பெற வேண்டும் .தமிழக அரசு விதித்த 30 விதமான மின் கட்டணம் மாற்றி அமைத்ததில் பிரதானமாக மிக முக்கியமானதான ஐந்து கோரிக்கைகளான பீக்கவர் கட்டணம், அதற்கு மின் கட்டண மீட்டர்களை வைக்க கூடாது.நிலைக்கட்டணம், சோலார் உற்பத்தியில் சேவை கட்டணம், மும்முனை மின் கட்டணத்தை திரும்ப வேண்டும்.

இதில் முதலமைச்சருக்கு எங்கள் கோரிக்கையைக் கொண்டு செல்லாமல் அதிகாரிகள் அதிகாரம் செய்கின்றனர்.தொழில் துறை உண்மையான கோரிக்கைகளை முன்னெடுத்து வரும் டிசம்பர் 12ம் தேதி கோவை காந்திபுரம் பேருந்து நிலையம் அருகில் நஞ்சப்பா சாலை, கிராஸ்கட் ரோடு பகுதியில் பெரிய அளவில் மனித சங்கிலி போராட்டம் நடத்த உள்ளோம் என்றார். அதற்கு காவல்துறை அனுமதியும் பெற்று உள்ளோம் என்றார்.

## நர்சிங் கல்லூரி மாணவர்கள் உள்ளிருப்பு போராட்டம்



பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து பி.பி.ஜி நர்சிங் கல்லூரி மாணவர்கள் இரண்டு நாட்களாக உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவை சரவணம்பட்டி பகுதியில் பிபிஜி நர்சிங் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இங்கு பயிலும் மாணவ மாணவிகள் கடந்த இரண்டு நாட்களாக உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். கல்லூரியில் அடிப்படை வசதி இல்லை என்றும் அதிக கட்டணம் வசூலிப்பதாகவும் குற்றம்சாட்டுகின்றனர். மேலும், முதலாம் ஆண்டு மாணவர்களை இரண்டாம் ஆண்டிற்கான கட்டணத்தை கட்டச்சொலி நிர்பந்தம் செய்வதாகவும், இரண்டாம் ஆண்டிற்கான கட்டணத்தை முதலாம் ஆண்டிலேயே கட்டினால் தான் தேர்வு எழுத அனுமதிப்பதாகவும், கட்டணம் கட்டத்தவறும் மாணவ மாணவிகளுக்கு நாள் ஒன்றிற்கு ரூ.50300 வரை அபராதம் வசூலிப்பதாக மாணவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

## 10 லட்சம் விதைப்பந்து தயாரிப்பில் ஈடுபட்ட மாணவியர்



ரோட்டரி கிளப் ஆப் கோயம்புத்தூர் சார்பில் கோவை நிர்மலா கல்லூரியில் 10 லட்சம் விதைப்பந்து தயாரிப்பில் மாணவியர்கள் ஈடுபட்டனர். இந்நிகழ்வில் ரோட்டரி மாவட்ட கவர்னர் ராகவேந்திரன், துணை கவர்னர் வெங்கட், கல்லூரி முதல்வர் மேரி உள்ளிட்டோர் தலைமை வகித்தனர்.

## மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிப்பது நமது கடமை

வி.எல்.பி. ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், சமூக விரிவாக்கச் சேவை மையம், குறிச்சி தொழில்பேட்டை, அரிமா சங்கம் மாவட்டம் 324சி உடன் இணைந்து சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை கடைபிடிக்கபட்டது. இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் சதீஷ்குமார் தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக குறிச்சித் தொழில்பேட்டை, அரிமா சங்கம், மாவட்டம் 324 சி, ஆளுநர், அட்வகேட் ஜெயசேகரன் மற்றும் ஊன்றுகோல் அறக்கட்டளை நிறுவனர் கருணாகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

அவர்கள் தங்களது சிறப்புரையில், சமுதாயம் வளர்ச்சி பெறக்கூடிய நிலையில் மாற்றுத்திறனாளிகளை ஊக்குவித்தலும், அவர்களின் நல்வாழ்வுத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியதும் அவசியம் என்பதை வலியுறுத்தினர். மேலும் மாற்றுத்திறனாளிகள் இச்சமுதாயத்தில் எதிர்கொள்ளும் குறிப்பிடத்தக்க சவால்களையும் அவைகளைச் சமாளிக்க வரும் தடைகளையும் அதன் மீதான நம்பிக்கையையும் எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவர்களால் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி, பருப்பு உட்பட பல்வேறு உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

## ரேஷன் கடையை சேதப்படுத்தி சென்ற காட்டு யானைகள்

கோவை மாவட்டத்தில் தடாகம், மருதமலை, மாங்கரை, பெரிய நாயக்கன்பாளையம், தொண்டாமுத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் காட்டு யானைகள் நடமாட்டம் அதிகளவு காணப்படுகிறது.

இந்நிலையில் தடாகம் நஞ்சுண்டாபுரம் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு அதிகாலை சுமார் மூன்று மணியளவில் வனப்பகுதியில் இருந்து வெளியேறிய 3 காட்டு யானைகள் நஞ்சுண்டாபுரம் நியாய விலை கடையை சேதப்படுத்தி அரிசியை சர்க்கரையை உண்டுள்ளது. இதனை பார்த்த அப்பகுதி மக்கள் வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்து சம்பவ இடத்திற்கு வந்த வனத்துறையினர் யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டியுள்ளனர்.

இது குறித்த பகுதி மக்கள் கூறுகையில், இப்பகுதியில் நாள்தோறும் காட்டு யானைகள் வருவதாகவும், அவ்வாறு வரும் காட்டு யானைகள் விளைநிலங்களை சேதப்படுத்துவதாக தெரிவித்தனர். வனத்துறையினர் யானையை வனப்பகுதிக்குள் விரட்டினாலும் மீண்டும் வெளியேறி விடுவதாகவும் தெரிவித்தனர். இந்த ஒரு வருடத்தில் மட்டும் சுமார் மூன்று முறை இந்த ரேஷன் கடையை யானைகள் சேதப்படுத்தி உள்ளதாக தெரிவித்தனர்.

இது குறித்து பேசிய ரேஷன் கடை பணியாளர் அமுதா, நேற்று வந்த யானை கூட்டம் சர்க்கரை மற்றும் அரிசியை சேதப்படுத்தி சென்றதாகவும் சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு வந்த யானைகள் ஜன்னல்களையும் சேதப்படுத்தி சென்றதாக தெரிவித்தார். வனத்துறையினர் வந்து ஆய்வு மேற்கொண்டு கடிதம் தருவதாகவும் அதனை அரசாங்கத்திடம் தொடர்ந்து அளித்து வந்தாலும் தற்போது வரை எந்த ஒரு இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்படவில்லை என தெரிவித்தார்.

# சிறப்பு அலங்காரம்



கோவை பீளமேடு சாலையில் உள்ள அஷ்டாம்ச வரத ஆஞ்சநேயர் கோவிலில் நேற்று ஆஞ்சநேயருக்கு ராஜமாருதி அலங்காரம் செய்யபட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அஷ்டாம்ச வரத ஆஞ்சநேயரை தரிசித்தனர்.